بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ نَحْمَدُهٗ وَنُصَلِّيْ عَلٰى رَسُوْلِهِ الْكَرِيْمِ وَعَلٰى عَبْدِهِ الْمَسِيْحِ الْمَوْعُوْدِ
وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّاَنْتُمْ اَذِلَّةٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

தொகுதி 9

இதழ் 32

ஆசிரியர்: முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர்: அப்தூர் ரஹ்மான் தாஹிர்

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஹிஜ்ரீ கமரீ 1447 - ஸஃபர் 12 ★ ஹிஜ்ரீ ஷம்ஸி 1404
ஸுஹூர் 07 ★ 07 ஆகஸ்ட் 2025

## அல்லாஹ்வின் கட்டளை

وَمَا تُنْفِقُوْا مِنْ خَيْرٍ فَلِاَنْفُسِكُمْ ؕ
وَمَا تُنْفِقُوْنَ اِلَّا ابْتِغَآءَ وَجْهِ اللّٰهِ ؕ
وَمَا تُنْفِقُوْا مِنْ خَيْرٍ يُّوَفَّ اِلَيْكُمْ
وَاَنْتُمْ لَا تُظْلَمُوْنَ ○

பொருள்

உங்கள் செல்வத்திலிருந்து எதைச் செலவு செய்தாலும் அது உங்களுக்கே (நன்மை தரும்). நீங்கள் அல்லாஹ்வின் விருப்பத்தை நாடியல்லாமல் செலவு செய்வதில்லை. செல்வத்திலிருந்து நீங்கள் எதைச் செலவு செய்தாலும், அது முழுமையாக உங்களுக்குத் திருப்பித் தரப்படும். மேலும் உங்களுக்கு அநீதி இழைக்கப்பட மாட்டாது. (2:273)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**நூஹின் கப்பல் என்ற நூலில் நமது போதனை என்ற பகுதியை ஒவ்வோர் அஹ்மதியும் கண்டிப்பாக படிக்க வேண்டும்**

**இன்னும் கூறப்போனால் நூஹின் கப்பல் என்ற அந்த நூல் முழுவதையும் படிக்க வேண்டும் என்று ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறியுள்ளார்கள்**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான
ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து......

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

**என்னை** அழிப்பதற்காக என் மீது ஒரு கொலை வழக்கும் உருவாக்கப்பட்டது. இதைப் பற்றி முன்பே எனது இறைவன் எனக்கு அறிவித்திருந்தான். என் மீது தொடரப்பட்ட அவ்வழக்கானது ஹஸ்ரத் ஈஸப்னு மர்யமுக்கு எதிராக உருவாக்கப்பட்ட வழக்கை விட மிகவும் கொடூரமானதாகும். ஏனெனில், ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுக்கு எதிராக தொடுக்கப்பட்ட வழக்கானது மார்க்கப் பகைமையின் அடிப்படையில் மட்டுமே உருவாக்கப்பட்டதாகும். அது நீதிபதியிடத்தில் ஓர் அற்பமான விஷயமாக இருந்தது. இன்னும் கூறப்போனால், அது நீதிபதிக்கு ஒரு பிரச்சனையே அல்ல. ஆனால், என் மீது தொடரப்பட்ட வழக்கிலோ நான் கொலை முயற்சி செய்ததாக குற்றம் சாட்டப்பட்டிருந்தேன். மேலும் மஸீஹ் உடைய வழக்கில் யூத மார்க்க அறிஞர்கள் சாட்சியம் கூறியது போன்று, இவ்வழக்கிலும் மௌலவிமார்கள் எனும் மார்க்க அறிஞர்களிலிருந்தும் ஒருவர் சாட்சியம் கூறுவது அவசியமாக இருந்ததால் மௌலவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவியை இவ்வேலைக்காக இறைவன் தேர்ந்தெடுத்தான். மஸீஹுக்கு தூக்குத் தண்டனை விதிக்கும் பொருட்டு அவருக்கு எதிராக சாட்சியம் கூற தலைமை புரோகிதன் நீதிமன்றத்திற்கு வந்தது போன்று, முஹம்மது ஹுஸைன் பட்டாலவியும் நீண்ட அங்கி அணிந்து கொண்டு எனக்கு எதிராக சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திற்கு வந்திருந்தார்.

ஆனால் இதில் காணப்படும் வேறுபாடு என்னவெனில், யூதர்களில் கண்ணியமானவர்களுக்கு ரோம அரசின் நீதிமன்றத்தில் அமர்வதற்கு இருக்கை அளிக்கப்பட்டு வந்ததால் தலைமை புரோகிதனுக்கு பிலாத்துவின் நீதிமன்றத்தில் இருக்கை கிடைத்தது. மேலும் அவர்களில் சிலர் நடுவராக (கவுரவ நீதிபதியாக) இருந்த காரணத்தால் தலைமை புரோகிதனும், நீதிமன்றத்தின் விதிகளுக்கேற்ப உட்கார இருக்கை பெற்றிருந்தான். மஸீஹ் இப்னு மர்யம் ஒரு குற்றவாளியைப் போன்று நீதிபதிக்கு முன்னால் நின்று கொண்டிருந்தார். ஆனால், எனது வழக்கில் அதற்கு எதிராக நடந்தது.

அதாவது நீதிபதி பிலாத்துவின் நிலையில் நீதியின் நாற்காலியில் அப்போது அமர்ந்திருந்த நீதிபதி கேப்டன் டக்லஸ் என் விரோதிகளின் விருப்பத்திற்கு மாறாக நீதிமன்றத்தில் நான் அமர்வதற்கு இருக்கை அளித்தார். இந்த பிலாத்து என்பவர் மஸீஹ் இப்னு மர்யமின் பிலாத்துவை விட மிகவும் நல்ல மனிதராக நடந்து கொண்டுள்ளார். நீதிமன்ற நடவடிக்கைகளில் அவர் மிகவும் தைரியத்துடனும், உறுதியுடனும் நீதிமன்றத்திற்கு கட்டுப்பட்டவராக இருந்தார். உயர் இடங்களிலிருந்து வரும் பரிந்துரைகளை அவர் பொருட்படுத்தவேயில்லை. இனம், மதம் மீதுள்ள எண்ணங்கள் எதுவும் அவரிடம் எவ்வித மாற்றத்தையும் சிறிதளவும் உண்டு பண்ணவில்லை. அவர் நீதியை முழுமையாக கடைபிடித்ததன் மூலம் சிறப்பான முன்மாதிரியை வெளிப்படுத்தினார். அவர் சமுதாயத்திற்கு பெருமைக்குரியவராகவும், நீதிபதிகளுக்கு முன்மாதியாகவும் திகழ்ந்தாரென்று கருதப்படுவராயின், அது ஒருபோதும் தவறாகாது. நீதியுடன் நடப்பது என்பது சிக்கலான ஒரு விஷயமாகும். எதுவரை ஒருவர் எல்லா தொடர்புகளிலிருந்தும் முற்றிலும் வேறுபட்ட நிலையில் நீதிமன்றத்தின் இருக்கையில் அமர மாட்டாரோ, அதுவரை அவரால் இக்கடமைகளை சிறந்தமுறையில் நிறைவேற்ற முடியாது. ஆயினும் இந்த பிலாத்து என்பவர் இக்கடமைகளை முழுமையாக நிறைவேற்றினார் என்று நாங்கள் உண்மையாகவே சாட்சியம் பகர்கிறோம். முதலாவது பிலாத்து ரோமராக இருந்தபோதிலும் இக்கடமையை அவரால் நல்லமுறையில் நிறைவேற்ற முடியவில்லை. அவருடைய அச்ச உணர்வானது மஸீஹை பெரும், பெரும் இன்னல்களுக்கு இலக்காக்கியது.

இந்த வேறுபாடானது நமது ஜமாஅத்தில் எப்பொழுதும் நினைவு கூரத்தக்க ஒன்றாகயிருக்கின்றது. எதுவரை இவ்வுலகம் இருந்து வருமோ எந்தெந்த விதமாக இந்த ஜமாஅத் இலட்சக்கணக்கிலும் கோடிக்கணக்கிலும் பல்கிப் பெருகிவிடுமோ அந்தந்த வகையில் இந்த நல்லெண்ணம் கொண்ட நீதிபதிகளைப் பற்றிய புகழும் நிலைபெற்றிருக்கும். இந்த வேலைக்காக அவரையே இறைவன் தேர்ந்தெடுத்திருப்பது அவரது நற்பேறாகும்.

இருபிரிவினர் அவரிடம் வருகின்றார்கள். அவர்களில் ஒருவர் அவரது மதத்தைச் சார்ந்த பாதிரியாக இருக்கிறார். மற்றவர் அவரது மதத்திற்கு வேறுபட்டவராக இருக்கிறார். இந்நிலையில், இவர் (மிர்ஸா ஸாஹிப்) உங்கள் மார்க்கத்திற்கு கடும் எதிரியாவார் என்று அவரிடம் வாக்குமூலம் கொடுக்கும் நிலையானது ஒரு நீதிபதிக்கு எவ்வளவு சோதனைக்குரிய இடமாகும். ஆயினும், வீரரான அந்த பிலாத்து இச்சோதனையை மிக உறுதியுடன் தாங்கிக் கொண்டார். அவர்களின் குறைமதியின் காரணமாக, கிறிஸ்தவ மார்க்கத்தைப் பற்றி கடினமான வார்த்தைகள் என கருதப்பட்ட இடங்களையும் எனது நூல்களிலிருந்து அவருக்கு எடுத்துக் காட்டப்பட்டது. மேலும் விரோதமான திட்டம் ஒன்றும் வகுக்கப்பட்டது. ஆயினும், அந்நீதிபதியின் முகத்தில் சிறிதளவும் மாற்றம் உண்டாகவில்லை. ஏனெனில், அவரது தெளிந்த மனசாட்சியின் காரணத்தால் உண்மையை அவர் புரிந்து கொண்டார். மேலும் அவர் வழக்கின் உண்மையான அடிப்படையை உண்மையான உள்ளத்துடன் ஆராய்ந்து வந்ததனால் இறைவன் அவருக்கு உதவி புரிந்தான். மேலும், அவரது உள்ளத்தில் சத்தியத்தைப் பற்றிய வெளிப்பாட்டையும் இறக்கினான். இதனால், உண்மையாக அவரிடம் சத்தியம் வெளிப்படுத்தப்பட்டது. மேலும், நீதிபதியை நிலைநாட்டும் வழி அவருக்குத் தென்பட்டதைக் குறித்து அவர் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். அதனால் அவர் நீதிபதியை முன்வைத்து வாதிக்கு எதிராக எனக்கு அமர்வதற்கு இருக்கை அளித்தார்.

இதன் தொடர்ச்சி 12-ம் பக்கம்....

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**மக்கா வெற்றியின் பின்னணியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு & லாஹூரைச் சேர்ந்த மதிப்பிற்குரிய இன்ஆமுல்லாஹ் ஸாஹிப் அவர்களின் துணைவியார் மதிப்பிற்குரிய அமீனா ஷஹ்னாஸ் ஸாஹிபா அவர்களின் நற்குறிப்பும் ஜனாஸா தொழுகையும்**

எவர் அபூ ஸுஃப்யானின் வீட்டுக்குச் சென்று விடுவாரோ அவருக்கும் உயிருக்கு உத்திரவாதம் வழங்கப்படும்; எவர் கஅபா பள்ளிவாசலுக்குள் நுழைந்து விடுவாரோ அவருக்கும் உயிருக்கு உத்திரவாதம் வழங்கப்படும்; எவர் தனது ஆயுதங்களை வீசிவிடுகின்றாரோ அவருக்கும் உயிருக்கு உத்திரவாதம் வழங்கப்படும்; எவர் தன்னுடைய வீட்டின் கதவுகளை அடைத்துக் கொண்டு உட்கார்ந்து கொள்கிறாரோ அவருக்கும் உயிருக்கு உத்திரவாதம் வழங்கப்படும்; எவர் ஹக்கீம் பின் ஹிஸ்ஸாமின் வீட்டுக்குச் சென்று விடுகின்றாரோ அவருக்கும் உயிருக்கு உத்திரவாதம் வழங்கப்படும் என்று பெருமானார் (ஸல்) அவர்கள் அறிவித்தார்கள்

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்)அவர்கள் இன்று நான் மன்னிப்பதனால் ஒரே ஒரு நபருக்கு மட்டும் துன்பம் ஏற்படலாம். மேலும், அவர் பிலால் ஆவார்; எவர்களை நான் மன்னிக்கின்றேனோ அவர்கள் அவருடைய சகோதரர்கள் அல்ல. அவருக்கு இழைக்கப்பட்ட துன்பம் வேறு எவருக்கும் இழைக்கப்படவில்லை என்பதைப் பார்த்தார்கள். எனவே அன்னார் (ஸல்) கூறினார்கள்: நான் அவருக்காக பழிவாங்குவேன். மேலும் எனது நபித்துவத்திற்கான மேன்மையும் நிலைத்திருக்கும் வகையில், பிலாலின் உள்ளமும் மகிழ்ச்சி அடையும் வகையில் பழிவாங்குவேன் என்று கூறினார்கள்

பிலாலின் கொடியை எழுப்பிவிடுங்கள். காலணிகளுடன் அவரது நெஞ்சின் மீது ஆடியவர்கள். அவருடைய கால்களில் கயிற்றைப் போட்டு தரதரவென இழுத்து வந்தவர்கள், அவரை கொதிக்கும் மணலில் கிடத்தியவர்கள் ஆன அந்த மக்கத்துத் தலைவர்களிடம், உங்களின் மற்றும் உங்களுடைய மனைவி மக்களின் உயிர்களைக் காப்பாற்ற வேண்டுமெனில், பிலாலின் கொடியின் கீழ் வந்து விடுங்கள் என்று கூறிவிடுங்கள் என்றும் கூறினார்கள்

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**

(அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 27 ஜூன் 2025** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1404 ஆண்டு **இஹ்ஸான்** மாதம் **27 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

கடந்த குத்பாவில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் படையுடன் சப்தமின்றி மக்காவுக்கு அருகில் சென்றடைந்தது பற்றியும், முகாமிட்டது பற்றியும் கூறப்பட்டு வந்தது. ஹுஸூர் (ஸல்) அவர்கள் 10,000 இடங்களில் நெருப்புகளை மூட்டச் செய்தார்கள். அபூ ஸுஃப்யானும், அவருடைய கூட்டாளிகளும் இதைப் பார்த்ததும் மிகவும் பதற்றமடைந்தனர். இதன் சிறிது விபரம் முன்னர் எடுத்துரைக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக மேற்கொண்ட விபரத்தை எடுத்துரைக்கின்றேன்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இதன் விபரத்தை ஓரிடத்தில் எடுத்துக் கூறுகிறார்கள்:

ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் அபூ ஸுஃப்யானின் பழைய நண்பராக இருந்ததனால் அவர்கள் அபூ ஸுஃப்யானை அவர் தம்முடன் பயண விலங்கின் மீது அமர வேண்டும் என்றும் வற்புறுத்தினார்கள். எனவே அவர்கள் அவரது கையைப் பிடித்து ஒட்டகத்தின் மீது தம்முடன் அமர வைத்துக் கொண்டார்கள். பிறகு ஒட்டகத்தை ஓட்டினார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் சபையைச் சென்றடைந்தார்கள். அவர்களுடன் காவலுக்கு நியமிக்கப்பட்டிருந்த ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இவரை எங்கும் கொன்று விடப் போகிறார்கள் என்று ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் அஞ்சினார்கள். ஆனால், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், உங்களில் யாராவது அபூ ஸுஃப்யானை சந்தித்தால் அவரைக் கொன்று விடாதீர்கள் என்று ஏற்கனவே கூறியிருந்தார்கள்.

இந்த எல்லாக் காட்சியும் அபூ ஸுஃப்யானின் உள்ளத்தில் ஒரு மாபெரும் மாற்றத்தை ஏற்படுத்தியிருந்தது. அபூ ஸுஃப்யான் பார்த்தார். சில ஆண்டுகளுக்கு முன்புதான் நாம் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை ஒரேயொரு தோழருடன் மக்காவை விட்டுச் செல்லும் நிர்பந்தத்திற்கு ஆளாக்கியிருந்தோம். ஆனால், இப்பொழுது இன்று 7 ஆண்டுகள்தான் கடந்திருக்கின்றன ; அதற்குள் அன்னார் (ஸல்) 10,000 பரிசுத்தவான்களுடன் அநீதியிழைக்காமலும், வரம்பு மீறாமலும் மக்காவின் மீது ஆகுமான முறையில் தாக்குதல் தொடுத்துள்ளார்கள். இதைத் தடுத்து நிறுத்த மக்கத்தினரிடம் ஆற்றல் இல்லை. ஆக, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் சபையை சென்றடைவதற்குள் இந்த நிபந்தனைகள் காரணமாக சிறிதும், அச்சம் மற்றும் பீதியின் காரணமாக சிறிதும் என அபூ ஸுஃப்யான் திகைத்துப் போயிருந்தார்.

கண்ணியத்திற்குரிய தூதர் (ஸல்) அவர்கள் அவரது இந்த நிலையைக் கண்டதும் ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்களிடம், அபூ ஸுஃப்யானை உம்முடன் அழைத்துச் செல்லுங்கள்; இரவு உம்முடன் வைத்துக் கொள்ளுங்கள்; காலையில் இவரை என்னிடம் அழைத்து வாருங்கள் என்று கூறினார்கள். எனவே அபூ ஸுஃப்யான் இரவில் ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்களுடன் இருந்தார். காலையில் அவரை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் அழைத்து வந்தபோது, ஃபஜ்ர் தொழுகைக்கான நேரமாக இருந்தது.

காலையில் எழுந்து தொழுவது பற்றி மக்கத்தினருக்கு என்ன தெரியும்? முஸ்லிம்கள் தண்ணீர் நிறைந்த குவளைகளுடன் இங்கும் அங்கும் வந்துபோய் கொண்டிருப்பதை அபூ ஸுஃப்யான் பார்த்தார். சிலர் உளூ செய்து கொண்டிருப்பதும், சிலர் வரிசை அமைத்து நிற்பதும் அவருக்குத் தென்பட்டது. அப்பொழுது அபூ ஸுஃப்யான் எனக்காக ஏதோ புதிய வகையான தண்டனை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது போலும்! என நினைத்தார். எனவே அவர் பதற்றமடைந்து இந்த மக்கள் அதிகாலையில் இது என்ன செய்து கொண்டிருக்கின்றார்கள்? என்று ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்களிடம் கேட்டார்.

நீ பயப்படத் தேவையில்லை; இந்த மக்கள் தொழப் போகின்றார்கள் என்று ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறினார்கள். இதற்குப் பிறகு, ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்குப் பின்னால் நின்று கொண்டார்கள்; மேலும் அன்னார் (ஸல்) ருகூ செய்யும்போது, அனைவரும் ருகூ செய்கிறார்கள்; அன்னார் (ஸல்) ஸஜ்தா செய்யும்போது அனைவரும் ஸஜ்தா செய்கின்றார்கள் என்பதையும் அபூ ஸுஃப்யான் பார்த்தார். ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் பாதுகாப்புப் பணியில் இருந்ததன் காரணமாக தொழுகையில் கலந்து கொள்ளவில்லை. இப்பொழுது இவர்கள் என்ன செய்து கொண்டிருக்கின்றார்கள்? முஹம்மத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் என்ன செய்கிறாரோ, அதையே இவர்களும் செய்யத் துவங்கி விடுகிறார்களே? என்று அன்னாரிடம் அபூ ஸுஃப்யான் கேட்டார்.

அதற்கு, நீ எந்த சிந்தனைகளில் மூழ்கிக் கிடக்கிறாய்? இதுவோ தொழுகை நிறைவேற்றப்படுகிறது; ஆனால், ஹஸ்ரத் முஹம்மத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இவர்களுக்கு உண்பதையும் பருகுவதையும் விட்டு விடுங்கள் எனக் கட்டளையிட்டார்கள் என்றால், இந்த மக்கள் உண்பதையும், பருகுவதையும் விட்டுவிடுவார்கள் என்று ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள், கூறினார்கள். அதற்கு, நான் (பேரரசர்) கிஸ்ரா அரசவையையும் பார்த்திருக்கின்றேன்; (பேரரசர்) கைஸரின் அரசவையையும் பார்த்திருக்கின்றேன்; ஆனால், எந்த அளவுக்கு முஹம்மத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின்

ஜமாஅத் அவர்களுக்காகத் தம்மை மாய்த்துக் கொள்கிறதோ அந்த அளவுக்கு (பேரரசர்களான) அவர்களுடைய சமுதாயங்கள் அவர்களுக்காக மாய்த்துக் கொள்வதைக் கண்டதில்லை என்று அபூ ஸுஃப்யான் கூறினார்.

பிறகு, ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள், இன்று நீ ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் தம் சமுதாயத்தை மன்னித்துவிடுவதற்கான கோரிக்கை வைக்க முடியாதா? எனக் கேட்டார்கள்.தொழுகை முடிந்ததும் ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் அபூ ஸுஃப்யானை அழைத்துக் கொண்டு ஹஸ்ரத் முஹம்மத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் முன் வந்தார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், அபூ ஸுஃப்யானே! அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவர் வேறு எவரும் இல்லை என்ற உண்மைத்துவம் உனக்குத் தெள்ளத் தெளிவாகிவிடும் நேரம் இன்னும் வரவில்லையா? எனக் கேட்டார்கள்.

அதற்கு, என் தாய் தந்தையார் தங்கள் மீது அர்ப்பணம்! தாங்கள் மிகவும் மென்மையானவர்; மிகவும் ஒழுக்கமானவர்; மேலும் மிகவும் அதிகமாக உறவுகளைப் பேணுபவர் ஆவீர்கள்; இறைவனைத் தவிர வேறு வணக்கத்திற்குரியது (ஏதும்) இருந்திருந்தால், அது எங்களுக்கும் ஏதாவது உதவி செய்திருக்குமே! என்ற விஷயத்தை நான் இப்பொழுது புரிந்து கொண்டேன் என்று அபூ ஸுஃப்யான் கூறினார்.

அதற்குப் பிறகு, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், அபூ ஸுஃப்யானே! நான் அல்லாஹ்வின் தூதர் ஆவேன் என்ற விஷயத்தை நீ புரிந்து கொள்ளும் நேரம் இன்னும் வரவில்லையா? எனக் கேட்டார்கள். அதற்கு, அபூ ஸுஃப்யான்! என் தாய், தந்தையர் தங்கள் மீது அர்ப்பணம் ஆவார்களாக! இது தொடர்பாக இப்பொழுது எனது உள்ளத்தில் சில ஐயங்கள் உள்ளன என்று கூறினார். ஆனால், அபூ ஸுஃப்யான் தயங்கிய நிலையிலும் கூட, அவருடன் சேர்ந்தே மக்காவுக்கு வெளியே முஸ்லிம்களின் படையைப் பற்றி அறிய வந்திருந்த அவருடைய கூட்டாளிகள் இருவரும் முஸ்லிம்கள் ஆகி விட்டார்கள். அவர்களில் ஒருவர் ஹக்கீம் பின் ஹிஸ்ஸாம் ஆவார். அதற்குப் பிறகு, அபூ ஸுஃப்யானும் இஸ்லாத்தை ஏற்றார். ஆனால், அநேகமாக அவரது உள்ளம் மக்கா வெற்றிக்குப் பிறகே முழுமையாக திறந்தது.

ஈமான் கொண்ட பிறகு ஹக்கீம் பின் ஹிஸ்ஸாம், இறைத் தூதர் (ஸல்) அவர்களே! தாங்கள் இந்தப் படையைத் தங்களது சமுதாயத்தை அழிப்பதற்காக கொண்டு வந்திருக்கிறீர்களா? என்று கேட்டார். அதற்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், இந்த மக்கள் அநீதியிழைத்தார்கள்; இந்த மக்கள் பாவம் செய்தார்கள்; நீங்கள் எல்லாம் ஹுதைபியாவில் எடுத்துக் கொள்ளப்பட்ட உடன்படிக்கையை மீறிவிட்டீர்கள்; குஸாஆவுக்கு எதிராக அநீதியான போர் செய்தீர்கள்; இறைவன் அமைதியை வழங்கியிருந்த அந்தப் புனித இடத்தில் போர் செய்தீர்கள் என்று கூறினார்கள்.அதற்கு ஹக்கீம், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! சரிதான்! ஐயமின்றி தங்களது சமுதாயம் இப்படித்தான் செய்தது; ஆனால், தாங்கள் மக்காவின் மீது தாக்குதல் தொடுப்பதற்கு பதிலாக ஹவாஸின் சமுதாயத்தின் மீது தாக்குதல் தொடுத்திருக்க வேண்டுமே! என்று கூறினார்.

அதற்கு, அந்த சமுதாயமும் அநீதியிழைக்கும் சமுதாயம் ஆகும்; இறைவன் மக்காவின் வெற்றி, இஸ்லாத்தின் ஆதிக்கம் மற்றும் ஹவாஸினின் தோல்வி ஆகிய இந்த அனைத்து விஷயங்களையும் என்னுடைய கைகளிலேயே நிறைவேறச் செய்வான் என்று நான் இறைவனிடம் நம்பிக்கை வைக்கிறேன் என்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள். இதற்குப் பிறகு, மக்கத்தினர் வாள் ஏந்தாமல் இருந்தார்கள் என்றால், அவர்களுக்கு உயிருக்கு உத்திரவாதம் கிடைக்குமா? என்று அபூ ஸுஃப்யான் கேட்டார். அதற்கு, தனது வீட்டின் கதவை அடைத்துக் கொள்ளும் ஒவ்வொருக்கும் உயிருக்கு உத்திரவாதம் வழங்கப்படும் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! அபூ ஸுஃப்யான் பெருமிதத்தை விரும்பும் மனிதர் ஆவார்; தனது கண்ணியத்துக்கும் ஏதாவது ஏற்பாடு செய்யப்பட வேண்டும் என்று அவர் சொல்ல வருகிறார் என்று ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறினார்கள். அதற்கு, மிக்க நன்று! எவர் அபூ ஸுஃப்யானின் வீட்டுக்குச் சென்று விடுவாரோ அவருக்கும் உயிருக்கு உத்திரவாதம் வழங்கப்படும்; எவர் கஅபா பள்ளிவாசலுக்குள் நுழைந்து விடுவாரோ அவருக்கும் உயிருக்கு உத்திரவாதம் வழங்கப்படும்; எவர் தனது ஆயுதங்களை வீசிவிடுகின்றாரோ அவருக்கும் உயிருக்கு உத்திரவாதம் வழங்கப்படும்; எவர் தன்னுடைய வீட்டின் கதவுகளை அடைத்துக் கொண்டு உட்கார்ந்து கொள்கிறாரோ அவருக்கும் உயிருக்கு உத்திரவாதம் வழங்கப்படும்; எவர் ஹக்கீம் பின் ஹிஸ்ஸாமின் வீட்டுக்குச் சென்று விடுகின்றாரோ அவருக்கும் உயிருக்கு உத்திரவாதம் வழங்கப்படும் என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

இந்த விபரம் அனைத்தையும் (ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் தீபாச்சா தஃப்ஸீருல் குர்ஆனில் எழுதியுள்ளார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இது தொடர்பாக இவ்வாறு கூறியுள்ளார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் காலத்தில் அபூ ஸுஃப்யான் மிகவும் பலவீனமான இதயம் கொண்டவராகவும், குறைவான புத்திக்கூர்மை உடைய மனிதராகவும் இருந்தார். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மக்காவை வெற்றி கொண்டபோது, அவரிடம் நீ இப்பொழுதும் புரிந்து கொள்ளவில்லையா?இது மனிதனின் வேலையல்ல என்பது இது வரை உனக்குத் தெரியவில்லையா? எனக் கேட்டார்கள். அதற்கு பதில் அளித்தவாறு அவர், உம் இறைவன் உண்மையாளன் ஆவான்; இந்த சிலைகளிடத்தில் ஏதாவது (ஆற்றல்) இருந்திருந்தால், இவை இப்பொழுது எங்களுக்கு உதவி செய்திருக்கும் என்பது இப்பொழுது புரிந்து விட்டது என்றார்.




பிறகு, பெருமானார் (ஸல்) அவர்கள் அவரிடம், நீ எனது நபித்துவத்தின் மீது ஈமான் கொள்கிறாயா? எனக் கேட்டபோது, அதாவது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவரிடம், (இந்தக்) கேள்வியைக் கேட்டபோது அவர் தயக்கத்தை வெளிப்படுத்தினார். அவருக்கு தவ்ஹீது புரிந்து விட்டது. ஆனால், நபித்துவம் புரியவில்லை.

சில இயல்புகளே எப்படி இருக்கும் என்றால், அவற்றில் புத்திக்கூர்மை குறைவாக இருக்கும். எது தவ்ஹீதுக்கு சான்றாக இருந்ததோ அதுவே நபித்துவத்துக்கும் சான்றாக இருந்தது. ஆனால், அபூ ஸுஃப்யான் அதில் வித்தியாசம் பார்த்துக் கொண்டிருந்தார். அவர் தவ்ஹீதையும் (ஏகத்துவத்தையும்), நபித்துவத்தையும் தனித்தனியாக ஆக்கி விட்டார். ஆக, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

எல்லாரும் ஒரே மட்டத்தைச் சேர்ந்த மனிதர்களாக இருப்பதில்லை. சிலர் ஸித்தீக்கே அக்பர் (ரலி) அவர்கள் போன்று முதல் தரத்திலும், சிலர் நடுத்தரத்திலும், சிலர் கடைசி தரத்திலும் இருப்பார்கள்.

இப்னு அக்வா அவர்கள் அறிவிக்கிறார்கள்: அபூ ஸுஃப்யானும், ஹக்கீம் பின் ஹிஸ்ஸாமும் திரும்பிச் செல்லும்போது, ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! எனக்கு அபூ ஸுஃப்யானின் இஸ்லாத்தைக் குறித்து அச்சம் இருக்கிறது என்று பணிவுடன் கூறினார்கள். அவர் இஸ்லாத்தைப் புரிந்து கொள்ளும் வரை, தங்களுடன் அல்லாஹ்வின் படைகளைக் கண்டு கொள்ளும் வரை அவரைத் திருப்பி அழைத்துக் கொள்ளுங்கள் என்று ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் கேட்டுக் கொண்டார்கள்.

இப்னு அபீ ஷீபா அவர்கள் அறிவிக்கிறார்கள்: அபூ ஸுஃப்யான் திரும்பிச் செல்ல முற்பட்டபோது, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தாங்கள் அபூ ஸுஃப்யான் குறித்து ஆணையிட்டால், அவரை வழியில் நிறுத்திக் கொள்ளலாம் என்று ஹஸ்ரத் அபூ பக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் பணிவுடன் கூறினார்கள்.

இப்னு இஸ்ஹாக் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அபூ ஸுஃப்யான் திரும்பிச் செல்லும்போது, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்களிடம், அபூ ஸுஃப்யானைப் பள்ளத்தாக்கின் புதர்களில் தடுத்து நிறுத்திக் கொள்ளுங்கள் என்று கூறினார்கள். எனவே ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் சென்று அபூ ஸுஃப்யானைத் தடுத்து நிறுத்தி விட்டார்கள். இதனால், ஹாஷிம் குலத்தவரே! நீர் ஏமாற்றுகின்றீரா? என்று அபூ ஸுஃப்யான் கேட்டார். அதற்கு, நபித்துவத்தைச் சேர்ந்தவர்கள் ஏமாற்றுவதில்லை என்று ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

மற்றோர் அறிவிப்புக்கு ஏற்ப நாங்கள் ஒருபோதும் ஏமாற்றுபவர்கள் இல்லை; ஆயினும், நீ அல்லாஹ்வின் படையைப் பார்க்கும் வரை, அல்லாஹ் இணை வைப்பார்களுக்காக ஆயத்தப்படுத்தி வைத்திருப்பதைப் பார்த்திடும் வரை, காலை வரை காத்திரு! என்று அன்னார் (ரலி) கூறினார்கள்.

ஆக, ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி)

அவர்கள் அபூ ஸுஃப்யானை அந்தப் புதர் பகுதியில் நிறுத்தி வைத்தார்கள். எதுவரை என்றால், பொழுது விடிந்து விட்டது. பல்வேறு கோத்திரங்கள் ஒவ்வொரு குழுக்களாக அபூ ஸுஃப்யானுக்கு முன்னால் கடந்து சென்றன.

ஒரு குழு கடந்து சென்றபோது, அப்பாஸே! இவர்கள் யார்? என்று அவர் கேட்டார். அதற்கு, இவர்கள் ஃகிஃப்பாரி மக்கள் ஆவார்கள்; ஃகிஃப்பார் கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள் என்று அவர்கள் கூறினர் அதற்கு, எனக்கு ஃகிஃப்பாரிகளுடன் என்ன கொடுக்கல் வாங்கல் இருக்கிறது ? என்று அவர் கூறினார். பிறகு ஜுஹைனா கோத்திரத்தினர் கடந்து சென்றனர். அப்போதும் அவர் அவ்வாறே கூறினார். பிறகு, ஸஃது பின் ஹுஸைம் கோத்திரத்தினர் கடந்து சென்றனர். அப்போதும் அவர் அப்படியே கூறினார். எனக்கு இந்த மக்களிடம் என்ன கொடுக்கல் வாங்கல் இருக்கிறது? என்றார். பிறகு ஸுலைம் கோத்திரத்தினர் கடந்து சென்றனர். அவர் மீண்டும் அப்படியே கூறினார்.

எதுவரை என்றால், எத்தகைய ஒரு படைக் குழு வந்தது என்றால், அது போன்று அவர் பார்த்திருக்கவில்லை. அவர் இவர்கள் யார்? என்று கேட்டார். அதற்கு ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள், இவர்கள் அன்ஸாரிகள் ஆவார்கள். அவர்களின் தலைவர் கொடியை வைத்திருக்கின்ற ஹஸ்ரத் ஸஃது பின் உபாதா (ரலி) அவர்கள் ஆவார்கள். உத்வேகத்தில் அபூ ஸுஃப்யான் இன்றைய நாள் போருக்கான நாளாகும். இன்று கஅபாவின் கண்ணியம் இருக்காது என்று கூறினார்கள். இதைக் கேட்ட அபூ ஸுஃப்யான், எதிர்க்க வாய்ப்பு கிடைத்து விட்டால், நாசத்திற்கான இந்த நாள் எவ்வளவு நன்றாக இருக்கும்! என்று கூறினார்.

(அதாவது) போரிட்டிருந்தோம் என்றால் சரி! இப்பொழுதோ எங்களால் போரிடக் கூட முடியாது என்றார்.

பிறகு, ஒரு படைக் குழு வந்தது. அது எல்லாப் படைக்குழுக்களைக் காட்டிலும் சிறியதாக இருந்தது. அதில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களும் அன்னாருடைய ஸஹாபா பெருமக்களும் இருந்தார்கள். நபி (ஸல்) அவர்களின் கொடி ஹஸ்ரத் ஸுபைர் பின் அவ்வாம் (ரலி) அவர்களிடம் இருந்தது.

மற்றோர் அறிவிப்பில் இது இவ்வாறு கூறப்பட்டுள்ளது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அபூ ஸுஃப்யானைக் கடந்து சென்ற போது, அவர் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தாங்கள் தங்களது சமுதாயத்தைப் படுகொலை செய்வதற்கான கட்டளையை பிறப்பித்து விட்டீர்களா? மேலும், ஸஃது பின் உபாதா என்ன கூறுகிறார் என்று தங்களுக்குத் தெரியாதா? என்று கேட்டார்.

அவர் என்ன சொன்னார்? என்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், கேட்டார்கள். அதற்கு, அவர் இப்படியெல்லாம் சொல்லிக் கொண்டிருந்தார்; நான் தங்களிடம் தங்களது சமுதாயம் குறித்து அல்லாஹ்வுக்காகக் கேட்டுக் கொள்கிறேன்; தாங்கள் எல்லா மக்களையும் விடத் தூய்மையானவர்கள் ஆவீர்கள்; இரத்த உறவுகளை பேணுபவரும் கருணை புரிபவரும் ஆவீர்கள்! என்று அபூ ஸுஃப்யான் கூறினார். அதற்கு, ஸஃது தவறாகக் கூறியுள்ளார்; இன்றைய நாளோ கருணைக்கான நாளாகும்; இன்று அல்லாஹ் கஅபாவுக்கு கண்ணியம் வழங்கிடுவான். மேலும் அல்லாஹ் குறைஷியர்களுக்கு உண்மையான கண்ணியத்தை வழங்கிடுவான் என்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், கூறினார்கள்.

இப்னு இஸ்ஹாக் இவ்வாறு எழுதியுள்ளார்கள்: ஹஸ்ரத் ஸஃது (ரலி) அவர்கள் கூறியதை முஹாஜிரிகளில் யாரோ ஒருவர் கேட்டு விட்டார்.

இந்த நிகழ்வை இப்னு ஹிஷ்ஷாம் இவ்வாறு எடுத்துக் கூறியிருக்கிறார்கள்:

அதைக் கேட்டவர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஆவார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நாம் அமைதியான சூழலில் நிலைபெற்றிருக்கவில்லை; ஹஸ்ரத் ஸஃது (ரலி) அவர்கள் குறைஷியர்கள் மீது தாக்குதல் தொடுத்து விடலாம் என்று அவர்கள் கூறினார்கள். இரண்டாவது அறிவிப்புக்கு ஏற்ப இந்த விஷயத்தை ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்களும், ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களும் கூறினார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஸஃது (ரலி) அவர்களை நோக்கி செய்தி அனுப்பினார்கள். அவர்களிடமிருந்து கொடியை வாங்கி, அவர்களின் மகன் கைஸிடம் வழங்கி விட்டார்கள். அதன் விபரத்தை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களும் வரலாற்று நூல்களில் இருந்து எடுத்துக் கூறியுள்ளார்கள். அன்னார் (ரலி) கூறுகிறார்கள்:

இந்தப் படை அபூ ஸுஃப்யானைக் கடந்து சென்று கொண்டிருந்தபோது, அன்ஸாரிகளின் தளபதி ஸஃது பின் உபாதா அவர்கள் அபூ ஸுஃப்யானைப் பார்த்து, இன்று இறைவன் வாளின் வலுவால் மக்காவில் நுழைவதை எங்களுக்கு ஆகுமானதாக ஆக்கி விட்டான்; இன்று குறைஷிய சமுதாயம் இழிவுபடுத்தப்படும்! என்று கூறினார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அபூ ஸுஃப்யானைக் கடந்து சென்றபோது அவர் உரத்த குரலில், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தாங்கள் தங்களது சமுதாயத்தைக் கொல்ல அனுமதி வழங்கிவிட்டீர்களா? இப்பொழுதுதான் அன்ஸாரிகளின் தலைவரான ஸஃதும் அவருடைய தோழர்களும் இப்படியெல்லாம் கூறிக் கொண்டிருந்தார்கள். இன்று போர் நடக்கும்; மக்காவின் கண்ணியம் இன்று எங்களைப் போரிடுவதிலிருந்து தடுத்து வைக்க முடியாது ; குறைஷியர்களை நாங்கள் இழிவுபடுத்தியே தீருவோம் என்று அவர்கள் எல்லாரும் உரத்த குரலில் கூறினார்கள்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தாங்களோ உலகில் எல்லைாரையும் விட அதிகம் நல்லவரும், எல்லாரையும் விட அதிகம் கருணையாளரும், எல்லாரையும் விட அதிகம் உறவுகளைப் பேணக்கூடிய மனிதரும் ஆவீர்கள்; தங்களுடைய சமுதாயத்தின் அநீதிகளை இன்று மறந்து விட மாட்டீர்களா? என்று அபூ ஸுஃப்யான் கேட்டார்.

அபூ ஸுஃப்யானின் இந்த முறையீடு மற்றும் கோரிக்கையைக் கேட்டதும், மக்காவின் வீதிகளில் அடியும், உதையும் வாங்கி, வீடு வாசல்கள் மற்றும் சொத்துபத்துகளை விட்டும் அகற்றப்பட்ட அந்த முஹாஜிர்களும் கூடத் துடித்துப் போனார்கள். அவர்களுடைய உள்ளங்களிலும் கூட மக்கத்தினருக்காக கருணை பிறந்து விட்டிருந்தது.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! அன்ஸாரி மக்கள் மக்கத்தினரின் கொடுமைகள் பற்றிய நிகழ்வுகளைக் குறித்து கேள்விப்பட்டதன் காரணமாக, இன்று அவர்கள் குறைஷியர்களோடு எப்படி நடந்து கொள்வார்கள்? என்று நமக்குத் தெரியாது என்று அவர்கள் கூறினார்கள்.

அதற்கு, அபூ ஸுஃப்யானிடம் ஸஃது தவறாகக் கூறியுள்ளார்; இன்று கருணைக்கான நாளாகும் ; இன்று அல்லாஹ் குறைஷியர்களுக்கும் கஅபா ஆலயத்துக்கும் கண்ணியம் வழங்கப்போகிறான் என்று ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள். பிறகு, ஹுஸூர் (ஸல்) அவர்கள் ஒரு நபரை ஹஸ்ரத் ஸஃது (ரலி) அவர்களை நோக்கி அனுப்பினார்கள். மேலும், “உமது கொடியை உம் மகன் கைஸிடம் கொடுத்து விடுவீராக! அவர் உமது இடத்தில் அன்ஸாரிகளின் படைக்குத் தளபதியாக இருப்பார்” என்று அவரிடம் கூறுமாறு அனுப்பினார்கள்.

இவ்வாறு பெருமானார் (ஸல்) அவர்கள் மக்கத்தினரின் உணர்வுகளையும் கருத்தில் கொண்டார்கள். அன்ஸாரிகளின் உள்ளங்களுக்கும் பெருந்துயரம் ஏற்படுவதை விட்டும் பாதுகாத்து வைத்தார்கள். மேலும், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு ஹஸ்ரத் கைஸ் (ரலி) அவர்கள் மீது முழு நம்பிக்கையும் இருந்தது. ஏனெனில், ஹஸ்ரத் கைஸ் (ரலி) அவர்கள் மிகவும் ஒழுக்கமான இயல்பைக் கொண்ட இளைஞராக இருந்தார்கள். எந்த அளவுக்கு ஒழுக்கமான நபர் என்றால், வரலாற்றில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது:

இவர்களின் மரணத்துக்கு அருகில் சில மக்கள் இவர்களை நலம் விசாரிக்க வந்து, சிலர் வராதபோது இவர்கள் தம் நண்பர்களிடம், என்னை அறிந்தவர்கள் சிலர் என்னை நலம் விசாரிக்க வராததற்கு என்ன காரணம்? என்று கேட்டார்கள். அதற்கு, தாங்கள் மிகவும் செல்வம் படைத்த நபர் ஆவீர்கள்; தாங்கள் ஒவ்வொருவருக்கும் அவருடைய துன்ப வேளையில் கடன் கொடுத்து விடுகிறீர்கள்; நகரத்தின் பல மக்கள் தங்களிடம் கடன்பட்டிருக்கிறார்கள். இதனால்தான் அவர்கள் எல்லாரும் ஒருவேளை தங்களுக்குத் தேவை ஏற்படலாம்; தாங்கள் அவர்களிடம் பணத்தைத் திருப்பிக் கேட்டு விடுவீர்கள் என நினைத்து தங்களை நலம் விசாரிக்க வரவில்லை என்று இவர்களுடைய நண்பர்கள் கூறினார்கள். அதற்கு இவர்கள், ஆஹா! என் நண்பர்களுக்குத் தேவையில்லாமல் துன்பம் ஏற்பட்டுள்ளது; கைஸின் கடன் யார் மீதெல்லாம் இருக்கிறதோ! அது அவருக்கு மன்னிக்கப்பட்டு விட்டது என்று என் சார்பாக நகரம் முழுவதிலும் அறிவிப்பு செய்திடுங்கள் என்று கூறினார்கள். இதனால் எவ்வளவு அதிகமான மக்கள் இவர்களை நலம் விசாரிக்க வந்தார்கள் என்றால், அதனால் இவர்களின் வீட்டுப் படிகள் உடைந்து விட்டன.

இப்னு அபீ ஷீபா இவ்வாறு அறிவித்துள்ளார்கள்:

ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள்,

MUNEEF
TRADING COMPANY
IRON & STEEL
MERCHANT
Y. Jafarullah
+91 97104 19554
+91 79047 15716
89/11, Shanmugapuram
5th (6th Corner) Street
Thiruvotriyur, Chennai 19
muneefsteeltc@gmail.com
GSTN: 33ALSPJ9110D1Z9

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தாங்கள் எனக்கு அனுமதி அளித்தால் நான் மக்கத்தினரிடம் செல்கிறேன்; மேலும், அவர்களுக்கு அழைப்பு விடுக்கிறேன்; தாங்கள் அவர்களுக்கு உயிருக்கு உத்திரவாதம் வழங்கி விடுங்கள்! என்று கேட்டுக் கொண்டார்கள்.

ஆக, அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் ஷஅபா எனும் வெள்ளை நிறக் கோவேறு கழுதையின் மீது ஏறி புறப்பட்டார்கள். அவர்கள் மக்காவில் நுழைந்தார்கள். மக்கத்தினரே! இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளுங்கள்; ஈடேற்றம் அடைவீர்கள்; உங்களிடம் எவ்வளவு பெரிய படை வந்துள்ளது என்றால், அதை எதிர்ப்பதற்கு உங்களிடம் ஆற்றல் இல்லை! என்று அவர்கள் கூறினார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத்(ரலி) அவர்கள் எடுத்துரைக்கின்றார்கள்:

படை கடந்து சென்ற பிறகு, ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள், அபூ ஸூஃப்யானிடம் கூறினார்கள் - ஏற்கனவே கூறப்பட்டது போன்று படை முன்னால் கடந்து செல்வதை இவர் பார்த்துக் கொண்டிருந்தார். ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் அபூ ஸூஃப்யானிடம், இப்பொழுது உனது பயண விலங்கை வேகமாக ஓட்டி மக்கா சென்று சேர்ந்து விடு! மேலும் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் வந்து விட்டார்கள் என்றும், அன்னார் இன்ன இன்ன வடிவத்தில் மக்கத்தினருக்கு உயிருக்கு உத்திரவாதம் வழங்கியுள்ளார்கள் என்றும் அந்த மக்களுக்கு தெரிவித்து விடு! என்றும் கூறினார்கள். அபூ ஸூஃப்யானோ நான் மக்கத்து மக்களின் ஈடேற்றத்திற்கான வழியை உண்டாக்கி விட்டேன் என்று தனது மனதில் மகிழ்ச்சியாக இருந்தார்.

இஸ்லாத்தின் துவக்கத்திலிருந்தே முஸ்லிம்களிடம் உள்ளப் பகைமையும் வன்மமும் கொண்டிருக்குமாறு மக்களுக்குப் போதித்து வந்த அவரது மனைவி ஹிந்தா காஃபிராக இருந்தும் கூட உண்மையில், ஒரு வீரமான பெண்மணியாக இருந்த ஹிந்தா முன்னால் வந்து, தன் கணவரின் தாடியைப் பிடித்தார்; மேலும், வாருங்கள்! இந்த முட்டாள் கிழவனைக் கொன்று விடுங்கள்; உங்களுடைய உயிர்கள் மற்றும் உங்களுடைய நகரத்தின் கண்ணியத்துக்காக சண்டையிட்டவாறு மடிந்து கொண்டு செல்லுங்கள் என்று இவர் உங்களுக்கு அறிவுரை கூறுவதற்கு பதிலாக, உங்களிடம் உயிருக்கு உத்திரவாதத்திற்கான அறிவிப்பு செய்கிறார் என்று மக்கத்தினருக்குக் குரல் கொடுக்கத் துவங்கி விட்டார்.

அவரது செயலைக் கண்டு, முட்டாளே! இந்த விஷயங்களைப் பேசுவதற்கான நேரம் இது இல்லை; செல்! உனது வீட்டில் ஒளிந்து கொள்! நான் எத்தகைய படையைப் பார்த்து வந்துள்ளேன் என்றால் அந்தப் படையை எதிர்ப்பதற்கான ஆற்றல் முழு அரேபியாவிலும் இல்லை என்று அபூ ஸூஃப்யான் கூறினார்.

இஸ்லாமியப் படை மக்காவில் நுழைந்தது பற்றிய நிகழ்வு எழுதப்பட்டுள்ளது.

புகாரீயில் ஹஸ்ரத் உர்வா அவர்கள் இவ்வாறு அறிவிக்கின்றார்கள்: அன்னார் ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) அவர்களுக்கு, மக்காவின் மேற்பகுதியான கஸாவிலிருந்து நுழைந்து விடுங்கள். உங்களது கொடியை ஹுஜூன் பகுதியில் நட்டு விடுங்கள்; மேலும், நான் வரும் வரை இடத்தை விடாதீர்கள் என்று கட்டளையிட்டார்கள். ஹுஜூன் என்பது முஹஸப் பள்ளத்தாக்கை நோக்கி இருக்கும் ஒரு மலையாகும். பைத்துல்லாஹ்விலிருந்து ஒன்றரை மைல் தொலைவில் உள்ளது.

ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் படையின் வலப்புறம் வலது பகுதியில் நியமிக்கப்பட்டிருந்தார்கள். அஸ்லம், சுலைம், ஃகஃப்பார், முஸைனா மற்றும் ஜுஹைனா ஆகிய கோத்திரங்கள் அவர்களது படைக் குழுவில் இணைந்திருந்தன. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவர்களுக்கு கண்ணியத்திற்குரிய மக்காவின் தாழ்வுப் பகுதியான லீத்திலிருந்து நுழையுமாறு கட்டளையிட்டார்கள். அன்னார் (ஸல்) அக்கம் பக்கம் உள்ள வீடுகளுக்கு அருகில் கொடியை நடுமாறு அவர்களுக்கு கட்டளையிட்டார்கள்.ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் (ரலி) அவர்களைக் காலாற்படைக்கு நியமித்தார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தம்முடைய அமீர்மார்களுக்கு, அவர்கள் எல்லாரும் போர் புரிவதை விட்டும் தம்முடைய கைகளைத் தடுத்து வைக்குமாறும், போர் புரியக் கூடாது என்றும், அவர்களுடன் சண்டையிடுபவருடன் மட்டும் சண்டையிட வேண்டும் என்றும் ஆணையிட்டிருந்தார்கள். இப்னு இஸ்ஹாக் இவ்வாறு எழுதியுள்ளார்:

ஸஃப்வான்,இக்ரிமா மற்றும் ஸுஹைல் ஆகியோர் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் போர் புரிய மக்களை அழைத்தனர். அவர்கள் மக்களை ஃஹந்தாவில் ஒன்று திரட்டினார்கள். அது மினாவுக்கு செல்லும் வழியில் மக்காவின் ஒரு பிரசித்திப் பெற்ற மலையாகும்.

குறைஷியர்கள் பனூ பக்ர் கோத்திரத்தினர் மற்றும் ஹஸீல் கோத்திரத்தினர் ஆகியோர் அவர்களிடம் ஒன்று கூடியிருந்தார்கள். அவர்கள் ஆயுதங்கள் ஏந்தியிருந்தனர். அவர்கள், முஹம்மத் (ஸல்) அவர்களால் ஒருபோதும் ஆற்றலால் மக்காவில் நுழைய முடியாது என்று அல்லாஹ்வின் மீது ஆணைகள் இட்டுக் கொண்டிருந்தார்கள். ஹஸீல்,அதாவது பனூ பக்ரின் ஒரு நபர் ஜிமாஷ் பின் கைஸ் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வருகை தொடர்பாக கேள்விபட்டபோது, தனது ஆயுதத்தை சரி செய்யத் தொடங்கினார். அவர் மனைவி அவரிடம், இந்த ஆயத்தம் யாருக்காக செய்யப்படுகிறது? என்று கேட்டார். அதற்கு, முஹம்மத் (ஸல்) அவர்கள் மற்றும் அவர்களுடைய தோழர்களுக்காக! என்று அவர் கூறினார்.

அந்தப் பெண் இறைவன் மீது ஆணையாக! முஹம்மத் (ஸல்) அவர்கள் மற்றும் அவர்களுடைய தோழர்களுக்கு முன்னால் இன்று எந்த விஷயமும் வெற்றி பெறாது என்று கூறினார். புத்திசாலித்தனமான பெண்ணாக இருந்தார். ஜிமாஷ் பின் கைஸ் மிகவும் ஆணவத்துடன் பரிகாசமாக, நான் அவர்களில் யாரையாவது ஒருவரை உனக்கு முன் சமர்ப்பிப்பேன் என்று எனக்கு நம்பிக்கை இருக்கிறது என்று கூறினார். அதாவது, முஸ்லிமை அடிமையாக்கிக் கொண்டு வருவேன். உனக்கு தொண்டு செய்ய உனக்கு ஒரு ஆள் தேவை இருக்கிறது; எனவே உனக்காக அடிமையைக் கொண்டு வருவேன் என்றார். அந்தப் பெண், உனக்கு அழிவு உண்டாகட்டும்; அப்படி செய்யாதே ; முஹம்மத் (ஸல்) அவர்களுடன் போர் செய்யாதே ; இறைவன் மீது ஆணையாக! உனது கருத்து சரியானதல்ல; அந்தோ நீ முஹம்மத் (ஸல்) அவர்களையும், அவர்களுடைய தோழர்களையும் பார்திருக்கலாமே! என்று கூறினார்.

நீ அண்மையில் பார்த்து விடுவாய்; என்று ஜிமாஷ் கூறினார். பிறகு அவர் ஸஃப்வான், இக்ரிமா மற்றும் ஸுஹைல் ஆகியோருடன் சேர்ந்து ஃஹந்தமாவுக்குச் சென்று விட்டார். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தமக்குக் கட்டளையிட்டது போன்று ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் அங்கிருந்து நுழைந்தபோது அவர்கள் ஒரு குழுவைப் பார்த்தார்கள். அவர்கள் இவர்களை நுழைய விடாமல் தடுத்தார்கள். மேலும், இவர்களுக்கு எதிராக ஆயுதங்களை அசைத்தார்கள். இவர்கள் மீது அம்பு எய்தார்கள். நீங்கள் ஆற்றலின் மூலமாக இங்கு நுழைய முடியாது என்று கூறினார்கள். ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் தம் தோழர்களை அழைத்தார்கள். இணை வைப்பாளர்களுடன் போர் நடந்தது. பனூ பக்ரின் 20 பேரும், ஹஸீலின் மூன்று அல்லது நான்கு பேரும் கொல்லப்பட்டார்கள்.

இப்னு இஸ்ஹாக் அவர்களது கூற்றுக் ஏற்ப இணை வைப்பாளர்களின் 13 அல்லது 14 பேர் கொல்லப்பட்டனர். அவர்களுக்குக் கடும் தோல்வி ஏற்பட்டது. அவர்கள் எல்லாப் பக்கமும் சிதறிப் போய் விட்டார்கள். ஒரு கூட்டம் மலைகள் மீது ஏறிவிட்டது. மிகவும் கர்வத்துடன் தன் மனைவிக்கு பதில் கூறிக் கொண்டிருந்த ஜிமாஷ் பின் கைஸ் அங்கிருந்து ஓடி விட்டார். மேலும்,தனது வீட்டுக்குச் சென்று மனைவியிடம், கதவை மூடு! என்று அவர் கூறினார்.

மனைவி கணவனிடம், உன்னுடைய அந்த வாதங்கள் என்னவாயிற்று? நீயோ நான் அடிமையைக் கொண்டு வருவேன் என்று இப்பொழுது கூறினாயே ! என்று கேட்டார். அவர் வருத்தம் தெரிவிக்கும் தோரணையில் பதில் கூறினார். மேலும், சில கவிதைகளைப் படித்துக் காட்டினார். அவற்றின் பொருள் என்னவென்றால், நீ ஃஹந்தமாவில் நடந்த போரை நேரில் பார்த்திருந்தால், அப்பொழுது ஸஃப்வானும் ஓடிப் போய் விட்டார். இக்ரிமாவும் ஓடிப் போய் விட்டார். அவர்கள் அனைவரையும் வாள்கள் வரவேற்றன. வாள்கள் ஒவ்வொரு மணிக்கட்டிலும், ஒவ்வொரு மண்டையிலும் பட்டு அதை வெட்டிக் கொண்டிருந்தன. சத்தத்தைத் தவிர வேறு எதுவும் கேட்கவில்லை. எங்களுக்குப் பின்னால் அவர்களுடைய வாள் வீச்சுகள் மற்றும் நெஞ்சில் இருந்து எழக்கூடிய சினமும், ஆவேசமும் கொதித்துக் கொண்டிருப்பது கேட்டது. எனவே நீ உனது வாயால் பழித்துரைக்கக் கூடிய சிறிய சொல் கூட சொல்லாதே என்பது (அந்தக் கவிதைகளின் பொருள்) ஆகும்.

ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களின் குதிரை வீரர்களில் ஹஸ்ரத் ஜுபைஷ் பின் அஷ்ர் மற்றும் ஹஸ்ரத் குர்ஸ் பின் ஜாபிர் ஃபஹ்ரீ ஆகிய இருவர் கொல்லப்பட்டனர் என்று புஹாரியில் உள்ளது.

மக்கத்தினருக்கு உயிருக்கு உத்திரவாதம் வழங்கப்பட்டது பற்றி இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அபூ ஸூஃப்யானுக்கு உயிருக்கு உத்திரவாதம் வழங்கினார்கள். மேலும், எவர் ஆயுதங்களைப் போட்டு விடுவாரோ அவருக்கு உயிருக்கு உத்திரவாதம் வழங்கப்படும்; எவர் தனது வீட்டுக்குள் நுழைந்து கொள்கிறாரோ அவருக்கு உயிருக்கு உத்திரவாதம் வழங்கப்படும்; எவர் கஅபா ஆலயத்தின்

வளாகத்திற்குள் சென்று விடுகிறாரோ அவருக்கு உயிருக்கு உத்திரவாதம் வழங்கப்படும்; எவர் அபூ ஸுஃப்யானின் வீட்டுக்குள் நுழைந்து விடுகிறாரோ அவருக்கு உயிருக்கு உத்திரவாதம் வழங்கப்படும்; எவர் ஹக்கீம் பின் ஹிஸ்ஸாமின் வீட்டுக்குள் நுழைந்து விடுகிறாரோ அவருக்கு உயிருக்கு உத்திரவாதம் அளிக்கப்படும் என சென்று அறிவித்து விடுங்கள்! என்று அவர்களிடம் கூறினார்கள்.

மக்கத்தினர் உயிருக்கு உத்திரவாதம் பெற்றுக் கொண்டிருக்கும்போது, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் உயிரை மாய்த்துக் கொள்ளும் தம் பேரன்பர்களான நன்றியுணர்வுள்ள தோழர்களை மறந்து விடவில்லை. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு நிச்சயமாக சில ஆண்டுகளுக்கு முன்பு மக்காவின் வீதிகளில் செய்யப்பட்ட அநீதி, அக்கிரமம் கூட நினைவுக்கு வந்து கொண்டே இருந்திருக்கும். அந்த பிலாலும் நினைவுக்கு வந்திருப்பார்கள். அவர்களைக் கயிறுகளால் கட்டிப் போட்டு இங்கு இதே கற்கள் நிறைந்த வீதிகளில் தரதரவென இழுக்கப்பட்டது.

இன்று அந்த பிலால் அந்த வெற்றிப் படையில் இணைந்திருந்தார்கள். அவர்களுடைய உள்ளத்திலும் சிந்தனையிலும் கூட இழைக்கப்பட்ட அநீதி, அக்கிரமத்தின் எல்லாக் காட்சிகளும் புத்துணர்வு பெற்றிருக்கும். ஹுஸூர் (ஸல்) அவர்கள் அதற்குப் பழிவாங்குவதையும் அவசியமெனக் கருதினார்கள். மேலும் பெருமானார் (ஸல்) அவர்கள் எவ்வளவு அழகாகப் பழிவாங்கினார்கள்!

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இதைப் பற்றி இவ்வாறு கூறியுள்ளார்கள்:

இதற்குப் பிறகு, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அபீஸீனிய அடிமையான பிலால் (ரலி) அவர்களுக்கு சகோதரராக ஆக்கியிருந்த அபீ ரவீஹா (ரலி) அவர்களைப் பற்றி இவ்வாறு கூறினார்கள்:

நாம் இப்பொழுது அபீ ரவீஹாவுக்கு எமது கொடியை வழங்குகிறோம். எவர் அபீ ரவீஹாவின் கொடியின் கீழ் வந்து நிற்பாரோ நாம் அவரையும் ஒன்று செய்ய மாட்டோம். மேலும் பிலால் (ரலி) அவர்களிடம், எவர் அபீ ரவீஹாவின் கொடியின் கீழ் வந்து விடுவாரோ அவருக்கு உயிருக்கு உத்திரவாதம் வழங்கப்படும் என்று நீர் உடனுக்குடன் அறிவித்துக் கொண்டே செல்வீராக! என்று கூறினார்கள்.

இந்தக் கட்டளையில் எவ்வளவு நுணுக்கமான நுட்பம் நிறைந்திருந்தது. மக்கத்தினர் பிலாலின் கால்களில் கயிற்றைக் கட்டி அவரை வீதிகளில் தரதரவென இழுத்து வந்தார்கள். மக்காவின் வீதிகளும், மக்காவின் மைதானங்களும் பிலாலுக்கு அமைதி நிறைந்த இடங்களாக இருக்கவில்லை. மாறாக, தண்டனைக்கான, இழிவுக்கான, பரிகாசத்திற்கான இடங்களாக இருந்தன. பிலாலின் உள்ளம் இன்று பழிவாங்குதலின் பக்கம் மீண்டும், மீண்டும் திரும்பிக் கொண்டிருக்கும். இந்த நன்றியுணர்வுள்ள தோழருக்குப் பழிவாங்குவதும் அவசியமாகும். ஆனால், நம்முடைய பழிவாங்குதல் இஸ்லாத்தின் மேன்மைக்கு ஏற்ப இருக்க வேண்டியதும் அவசியமாகும் என்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எண்ணினார்கள்.

எனவே அன்னார் (ஸல்) பிலால் (ரலி) அவர்களுக்காக வாளைக் கொண்டு அவர்களுடைய எதிரிகளின் தலைகளை சீவி விடும் வகையில் பழிவாங்கவில்லை. மாறாக, அவர்களின் சகோதரரின் கையில் ஒரு மிகப் பெரிய கொடியை வழங்கி நிற்க வைத்து விட்டார்கள். மேலும், பிலால் (ரலி) அவர்களை, எவர் ஒருவர் என் சகோதரரின் கொடியின் கீழ் வந்து நிற்பாரோ அவருக்கு உயிருக்கு உத்திரவாதம் வழங்கப்படும் என்று அறிவிப்பதற்காக நியமித்து விட்டார்கள். இது எத்தகைய கம்பீரமான பழிவாங்குதலாக இருந்தது! இது எவ்வளவு அழகான பழிவாங்குதலாக இருந்தது!

ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள், மக்கத்தினரே! வாருங்கள்! என் சகோதரரின் கொடியின் கீழ் நின்று கொள்ளுங்கள்; உங்களுக்கு உயிருக்கு உத்திரவாதம் வழங்கப்படும் என்று உரத்தக் குரலில் அறிவிக்கும்போது, பழிவாங்கும் உணர்வுகள் தானாகவே அவரது உள்ளத்திலிருந்து நீங்கிக் கொண்டே இருந்திருக்கும். மேலும், எந்தப் பழிவாங்குதலை ஹஸ்ரத் முஹம்மத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எனக்காகத் தேர்ந்தெடுத்துள்ளார்களோ அதை விட மேலான அழகான பழிவாங்குதல் எனக்காக வேறு எதுவும் இருக்க முடியாது என்று அவர் உணர்ந்திருப்பார்.

பிறிதோரிடத்தில் அவர்கள் இதை இப்படி எடுத்துக் கூறியுள்ளார்கள்: இந்த நிகழ்வில் எல்லாவற்றையும் விட மாபெரும் விஷயம் பிலாலின் கொடியாகும். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பிலாலுக்காகக் கொடியை உருவாக்குகிறார்கள். மேலும், எவர் பிலாலின் கொடியின் கீழ் நின்று விடுவாரோ அவருக்கு அடைக்கலம் வழங்கப்படும் என்று கூறுகிறார்கள். அதாவது, அவரது சகோதரரின் கொடி (என்பது) இங்கு அதைத்தான் குறிக்கிறது.

ஆனால், தலைவராகவோ ஹஸ்ரத் முஹம்மத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இருந்தார்கள். ஆனால், ஹஸ்ரத் முஹம்மத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்காக எந்தக் கொடியும் உருவாக்கப்படவில்லை. அன்னாருக்குப் பிறகு தியாகங்கள் செய்யக் கூடியவராக அபூ பக்ர் (ரலி) அவர்கள் இருந்தார்கள். ஆனால், ஹஸ்ரத் அபூ பக்ர் (ரலி) அவர்களுக்கும் எந்தக்கொடியும் உருவாக்கப்படவில்லை. அதற்குப் பிறகு முஸ்லிமான தலைவர் உமர் இருந்தார்கள். ஆனால், ஹஸ்ரத் உமர்(ரலி) அவர்களுக்கும் எந்தக் கொடியும் உருவாக்கப்படவில்லை.

அதற்குப் பிறகு ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டவராக இருந்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்களின் மருமகனாகவும் இருந்தார்கள். ஆனால், ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுக்கும் எந்தக் கொடியும் உருவாக்கப்ப்படவில்லை. அவர்களுக்குப் பிறகு அலீ (ரலி) அவர்கள் இருந்தார்கள். அன்னார் (ரலி) பெருமானார் (ஸல்) அவர்களின் சகோதரராகவும், அன்னாருடைய மருமகனாகவும் இருந்தார்கள். ஆனால், ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களுக்கு எந்தக் கொடியும் எழுப்பப்படவில்லை.

பிறகு ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்கள் எத்தகைய நபராக இருந்தார்கள் என்றால், அவர்களைப் பற்றி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அவர் எப்படிப்பட்ட நபர் என்றால் அவர் உயிருடன் இருக்கும் வரை முஸ்லிம் சமுதாயத்தில் வேறுபாடு ஏற்படாது என்று கூறுகிறார்கள். ஆனால், அப்துர் ரஹ்மான் (ரலி) அவர்களுக்காகவும் எந்தக் கொடியும் உருவாக்கப்படவில்லை. பிறகு அப்பாஸ் பெருமானார் (ஸல்) அவர்களின் சிறிய தந்தையாராக இருந்தார்கள். மேலும், சிலவேளை அவர்கள் அவமரியாதையாகவும் பேசி விடுவார்கள். ஆனால், பெருமானார் (ஸல்)அவர்கள் கோபித்துக் கொள்ள மாட்டார்கள். ஆனால், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவர்களுக்கும் எந்தக் கொடியையும் உருவாக்கவில்லை.

பிறகு அனைத்து தலைவர்களும் உச்சகட்ட மனிதர்களும் இருந்தார்கள்.காலித் பின் வலீத் அவர்கள் ஒரு தலைவரின் மகன் ஆவார்கள். சுயமே மிகவும் பெயர் பெற்ற மனிதராக இருந்தார்கள். அவர்கள் இருந்தார்கள். அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்கள் ஒரு தலைவரின் மகன் ஆவார்கள். இவ்வாறே இன்னும் பெரும், பெரும் தலைவர்களின் மகன்கள் இருந்தனர். ஆனால் அவர்களில் எவருக்கும் கொடி உருவாக்கப்படவில்லை. கொடி உருவாக்கப்படுகிறது என்றால், பிலாலுக்கு உருவாக்கப்படுகிறது? ஏன்? இதற்கு என்ன காரணமாக இருந்தது?

இதற்கு காரணம் என்னவெனில், கஅபா ஆலயத்தின் மீது தாக்குதல் தொடுக்கப்பட இருந்தபோது, எவர்கள் கொல்லப்பட இருக்கிறார்களோ அவர்கள் தம் சகோதரர்கள் ஆவார்கள் என்பதை அபூ பக்ர் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் தாமும், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தாங்கள் தங்களுடைய சகோதரர்களை கொல்வீர்களா? என்று கூறிவிட்டார்கள். அவர்கள் அநீதிகளை மறந்து போயிருந்தார்கள். இவர்கள் என் சகோதரர்கள் ஆவார்கள் என்பதை அறிவித்திருந்தார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! இந்தக் காஃபிர்களை கொல்லுங்கள் என்று உமரும் கூறி வந்தார்கள்.

ஆனால், பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் அந்த மக்களை மன்னிக்க வந்தபோது, அவர்கள் தம் உள்ளத்தில் நல்லதாயிற்று, நம் சகோதரர்கள் மன்னிக்கப்பட்டார்கள் என்றே கூறியிருப்பார்கள். உஸ்மானும், அலீயும் கூட நம் சகோதரர்கள் மன்னிக்கப்பட்டார்கள்; அவர்கள் நம்முடன் கடுமையாக நடந்து கொண்டார்கள் என்றால் என்ன? என்றே கூறியிருப்பார்கள்.

சுயமே ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்)அவர்களும் அந்த மக்களை மன்னிக்கும்போது, இவர்களில் என் சிறிய தந்தைமார்களும் இருந்தார்கள்; சகோதரர்களும் இருந்தார்கள். இவர்களில் என் மருமகன், அன்பர்கள், உறவினர்களும் இருந்தார்கள். நான் இவர்களை மன்னித்து விட்டேன்; என்றால் நல்லதுதான் ஆகியிருக்கிறது. என் சொந்த உறவினர்கள் தப்பித்துக் கொண்டார்கள் என்றே கருதியிருப்பார்கள். ஒரேயொரு நபர்தான் இருந்தார். அவருக்கு மக்காவில் எந்த உறவும் இருக்கவில்லை; அவருக்கு மக்காவில் எந்த ஆற்றலும் இருக்கவில்லை. அவருக்கு மக்காவில் எந்த நண்பரும் இருக்கவில்லை.

மேலும் அவரது ஆதரவற்ற நிலையில், அவர் மீது எத்தகைய அநீதியிழைக்கப்பட்டது என்றால், அது அபூ பக்ர் மீது இழைக்கப்படவில்லை. அலீ மீதும் இழைக்கப்படவில்லை. உஸ்மான் மீதும் இழைக்கப்படவில்லை.உமர் மீதும் இழைக்கப்படவில்லை. இன்னும் சொல்வதாயின் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீதும்

இழைக்கப்படவில்லை. கொதிக்கின்ற சுடும் மணலில் பிலால் வெறும் உடலோடு படுக்க வைக்கப்பட்டார்.

நீங்கள் பாருங்களேன்; வெறுங்காலில் கூட மே அல்லது ஜூன் மாதத்தில் நடந்து போகும்போது - இங்கோ வெப்பம் குறைவாக இருக்கிறது. ஆனால், வெப்பமான நாடுகளில் வெறுங்காலில் கூட நடக்க முடியாது. மே மற்றும் ஜூன் ஆகிய மாதங்களிலோ அங்கும் வெயிலில் வெறுங்காலில் நடக்க முடியாது. ஆனால், அவரை வெறும் உடம்பாக்கி கொதிக்கின்ற மணலில் படுக்க வைத்தார்கள். பிறகு ஆணிகள் உள்ள காலணிகளை அணிந்து கொண்டு இளைஞர்கள் அவருடைய நெஞ்சின் மீது (ஏறி நின்று) ஆடினார்கள். இறைவனைத் தவிர வணக்கத்திற்குரியவர்கள் இன்னும் இருக்கிறார்கள் என்று சொல்; முஹம்மத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் (நவூதுபில்லாஹ்) பொய்யர் என்று சொல் என்று கூறினார்கள்.

பிலால் அதற்கு எதிரில் அவர்கள் அடிக்கும்போது, اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ என்று தமது ஹபஷீ மொழியில் கூறினார்கள். அந்த நபர் முன்னால் இருந்து இந்த பதிலைத்தான் கூறினார். அதாவது நீங்கள் என் மீது எவ்வளவு வேண்டுமானாலும் அநீதியிழைத்துக் கொள்ளுங்கள்; நான் இறைவன் ஒருவன் என்பதைப் பார்த்து விட்ட பிறகு, இதை எப்படி என்னால் கூறமுடியும்? மேலும் ஹஸ்ரத் முஹம்மத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இறைவனின் உண்மையான தூதர் ஆவார்கள் என்பது எனக்கு தெரியும்போது, நான் அன்னாரை எப்படிப் பொய்யர் என்று கூறமுடியும்? இதனால் அவர்கள் இன்னும் அடிக்க ஆரம்பித்து விடுவார்கள். பல மாதங்கள் வெயில் காலத்தில் அவர்களுடன் இவ்வாறே நடந்து கொள்ளப்பட்டது.

இவ்வாறு குளிர் காலத்தில் அந்த மக்கள் என்ன செய்து வந்தார்கள் என்றால், அவர்களுடைய கால்களில் கயிற்றைக் கட்டி அவர்களை மக்காவின் கற்கள் நிறைந்த வீதிகளில் தரதரவென இழுத்துச் சென்றார்கள். அவர்களுடைய தோல் காயமடைந்து வந்தது. அவர்கள் தரதரவென இழுத்துச் சென்றார்கள். மேலும், (நவூதுபில்லாஹ்) முஹம்மத் (ஸல்) அவர்கள் பொய்யர் என்று சொல்; இறைவனைத் தவிர வேறு வணக்கத்திற்குரியவர்களும் இருக்கின்றனர் என்று சொல் என்று கூறிவந்தார்கள்.

அப்பொழுது அவர்கள்,

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ

என்று கூறிவந்தார்கள்.

இப்பொழுது இஸ்லாமிய படை 10,000 பேருடன் நுழைய இருந்தது. பிலாலுடைய உள்ளத்தில், இன்று அந்தக் காலணிகளுக்குப் பழிவாங்கப்படும். இன்று அந்த அடிமைகளுக்கான இழப்பீடு எனக்குக் கிடைக்கும் என்ற சிந்தனை வந்திருக்கும்; ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் , எவர் அபூ ஸுஃப்யானின் வீட்டிற்குள் நுழைந்து விட்டாரோ அவர் மன்னிக்கப்பட்டார். எவர் கஅபா ஆலயத்தில் நுழைந்து விடுகிறாரோ அவர் மன்னிக்கப்பட்டார். எவர் தன் ஆயுதங்களை வீசிவிட்டாரோ அவர் மன்னிக்கப்பட்டார். எவர் தன் வீட்டின் கதவுகளை அடைத்துக் கொள்கிறாரோ அவர் மன்னிக்கப்பட்டார் என்று கூறியபோது பிலாலின் உள்ளத்தில், இவர்களோ தம் சகோதரர்கள் அனைவரையும் மன்னிக்கிறார்கள்; நல்லது செய்கிறார்கள்; ஆனால், எனக்கான பழிவாங்குதல் எஞ்சி இருந்து விட்டதே என்ற சிந்தனை வந்திருக்கும்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்)அவர்கள் இன்று நான் மன்னிப்பதனால் ஒரே ஒரு நபருக்கு மட்டும் துன்பம் ஏற்படலாம். மேலும், அவர் பிலால் ஆவார்; எவர்களை நான் மன்னிக்கின்றேனோ அவர்கள் அவருடைய சகோதரர்கள் அல்ல. அவருக்கு இழைக்கப்பட்ட துன்பம் வேறு எவருக்கும் இழைக்கப்படவில்லை என்பதைப் பார்த்தார்கள். எனவே அன்னார் (ஸல்) கூறினார்கள்: நான் அவருக்காக பழிவாங்குவேன். மேலும் எனது நபித்துவத்திற்கான மேன்மையும் நிலைத்திருக்கும் வகையில், பிலாலின் உள்ளமும் மகிழ்ச்சி அடையும் வகையில் பழிவாங்குவேன் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் , பிலாலின் கொடியை எழுப்பிவிடுங்கள். காலணிகளுடன் அவரது நெஞ்சின் மீது ஆடியவர்கள். அவருடைய கால்களில் கயிற்றைப் போட்டு தரதரவென இழுத்து வந்தவர்கள், அவரை கொதிக்கும் மணலில் கிடத்தியவர்கள் ஆன அந்த மக்கத்துத் தலைவர்களிடம், உங்களின் மற்றும் உங்களுடைய மனைவி மக்களின் உயிர்களைக் காப்பாற்ற வேண்டுமெனில், பிலாலின் கொடியின் கீழ் வந்து விடுங்கள் என்று கூறிவிடுங்கள் என்று கூறினார்கள்.

உலகம் தோன்றிய நாளில் இருந்து, மனிதனுக்கு ஆற்றல் கிடைக்கப் பெற்ற நாளில் இருந்து, ஒரு மனிதன் மற்ற மனிதனிடம் தனது இரத்தத்திற்குப் பழிவாங்க ஆயத்தமானதிலிருந்து, அவனுக்கு ஆற்றல் கிடைத்ததிலிருந்து இது போன்ற மகத்துவ மிக்க பழிவாங்குதலை எந்த மனிதரும் மேற்கொள்ளவில்லை என்று நான் புரிகிறேன்.

பிலாலின் கொடி கஅபா ஆலயத்துக்கு முன்னால் மைதானத்தில் நடப்பட்டிருக்கும் போது, அவரைக் காலால் நசுக்கி வந்த அந்த அரேபியத் தலைவர்கள், மேலும் (நவூதுபில்லாஹ்) முஹம்மத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பொய்யர் என்று சொல்கிறாயா? இல்லையா? என்று கூறி வந்தவர்கள், நம்முடைய உயிர் தப்பி விட வேண்டும் என்று ஓடி ஓடி போயும், தம் மனைவி மக்களின் கைகளைப் பிடித்து பிடித்து வந்தும், அவர்களை அழைத்து, அழைத்து வந்தும் பிலாலின் கொடியின் கீழ் கொண்டு வந்திருக்கும் போது, அந்த நேரத்தில் பிலாலின் உள்ளமும், அவரது உயிரும் எப்படி ஹஸ்ரத் முஹம்மத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது அர்ப்பணமாயிருக்கும்! நான் இந்த காஃபிர்களைப் பழிவாங்கியிருப்பேனா? இல்லையா? தெரியவில்லை; அல்லது பழிவாங்கியிருக்க முடியுமா? இல்லையா என்று தெரியவில்லை. இப்பொழுது அந்தப் பழிவாங்குதல் நடந்து விட்டது; எவருடைய காலணிகள் என் நெஞ்சின் மீது பட்டனவோ அந்த ஒவ்வொரு நபரின் தலையும் என் காலணிக்கு முன்னால் குனிய வைக்கப்பட்டு விட்டது என்று அவர் கூறியிருப்பார்.

இது எத்தகைய பழிவாங்குதலாக இருந்தது? என்றால், அது யூஸுஃபின் பழிவாங்குதலைக் காட்டிலும் மிகவும் மேன்மை மிக்கதாக இருந்தது. ஏனெனில், யூஸுஃப் தம் தந்தைக்காக தம் சகோதரர்களை மன்னித்திருந்தார்கள். யாருக்காக செய்தார்களோ அவர்கள் அன்னாரின் தந்தை ஆவார்கள். எவர்களை மன்னித்தார்களோ அவர்கள் அன்னாருடைய சகோதரர்கள் ஆவார்கள். ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்கள் தம் சிறிய தந்தையாரையும், சகோதரர்களையும் ஓர் அடிமையின் காலணிகளுக்காக மன்னித்தார்கள். யூஸுஃபின் பழிவாங்குதல் அதற்கு எதிரில் என்ன அந்தஸ்தை கொண்டிருக்கிறது?

ஒரு பலவீனமான மனிதர் இருக்கிறார்; அவரது குழந்தைப் பருவமும், இளமையும் குறைஷிய தலைவர்களின் அடிமைத்துவத்தில் கழிகிறது. அவருக்குப் பெருமானார் (ஸல்) அவர்கள் இந்த அளவுக்கு மனமகிழ்ச்சியும், கண்ணியத்தையும் வழங்கியுள்ளார்கள். எடுத்துக் கூறப்பட்டது போன்று, அதற்கான எடுத்துக்காட்டு உலக வரலாற்றில் கிடைப்பதில்லை. இது என்றென்றைக்கும் நினைவுச் சின்னமாக இருக்கும்.

ஆக, இதுதான் நம் எஜமானரும், தலைவருமான ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களின் பழிவாங்குதலின் அழகிய முன்மாதிரி ஆகும்! اَللّٰهُمَّ صَلِّ عَلٰى مُحَمَّدٍ وَّعَلٰى اٰلِ مُحَمَّدٍ وَبَارِكْ وَسَلِّمْ اِنَّكَ حَمِيْدٌ مَّجِيْدٌ

இப்னு ஹிஷ்ஷாம் அவர்கள் எழுதுகிறார்கள்: மக்கா வெற்றியில் முஹாஜிர்கள் அடையாளமாக யா பனீ அப்திர் ரஹ்மான்! என்பது இருந்தது. அதாவது, அப்துர் ரஹ்மானின் மகன்களே! கஸ்ரஜ் கோத்திரத்தின் அடையாளமாக யா பனீ அப்தில்லாஹ் என்பது இருந்தது. அதாவது, அப்துல்லாஹ்வின் மகன்களே!. அவ்ஸ் கோத்திரத்தின் அடையாளமாக யா பனீ உபைதில்லாஹ் என்பது இருந்தது. அதாவது, உபைதுல்லாஹ்வின் மகன்களே!.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அஸாஃஹிரின் மலைப் பாதையில் வந்தபோது - அது கஸாஹ்வின் இன்னொரு பெயர் ஆகும் - அப்போது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மக்கா வெற்றி நாளன்று இங்கிருந்துதான் மக்காவில் நுழைந்தார்கள். அப்பொழுது பெருமானார் (ஸல்) அவர்கள் வாள்களின் பொலிவைக் கண்டதும், நான் உங்களைப் போர் புரிவதை விட்டும் தடுக்கவில்லையா? என்று கேட்டார்கள்.

ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களுடன் போர் நடந்ததாகவும், அதனால் அவர்களும் வாள் வீசியதாகவும் கூறப்பட்டது. முதலில் எதிரி தாக்குதல் தொடுத்தான். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள்,

திருக்குர்ஆனிலிருந்து...


**நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)**

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

W,A ABDUL AZEEZ mob: 7358346786
Proprietor off : 044- 2260 1886

**RAZIK XEROX & TELECOM**

AUTHORISED AIR, BUS, RAIL BOOKING CENTRE
AO MULTI COLOUR PLAN XEROX



➤ PASSPORT, VISA,MONEY TRANSFER, PANCARD,
➤ LAMINATION, SPIRAL BINDING, PRINT OUT,
➤ SCANNING, RECHARGE, COLOUR XEROX,
➤ ALL VEHICLE INSURANCE, COURIER

NO:1,V.V COLONY, 1ST STREET,
ADAMBAKKAM, CHENNAI-600 088
E-MAIL: razikxerox@gmail.com

அல்லாஹ்வின் தீர்ப்பு எல்லாவற்றையும் விடச் சிறந்தது என்று கூறினார்கள். அதாவது, இன்று உங்களால் ஆற்றலின் வலுவால், முஸ்லிம்களை மக்காவில் நுழைவதை விட்டும் தடுக்க முடியாது என்பதை அல்லாஹ் காஃபிர்களுக்குக் காட்ட விரும்பினான். இது இறைவனின் ஒரு மாற்ற முடியாத தீர்ப்பாகும். அதை எவராலும் தடுக்க முடியாது. இதுதான் மக்காவில் நுழைந்தது பற்றிய துவக்க எடுத்துரைப்பாக இருந்தது. இது இனியும் எடுத்துரைக்கப்படும். இன்ஷா அல்லாஹ்!

இப்பொழுது நான் ஒரு மர்ஹூமாவைப் பற்றிய நற்குறிப்பை எடுத்துக் கூறப்போகிறேன். தொழுகைக்குப் பிறகு அவர்களுக்கு ஜனாஸா தொழுகையை தொழ வைப்பேன். இவர்கள் லாஹூரைச் சேர்ந்த மதிப்பிற்குரிய இன்ஆமுல்லாஹ் ஸாஹிப் அவர்களின் துணைவியார் மதிப்பிற்குரிய ஆமினா ஷஹ்னாஸ் ஸாஹிபா ஆவார்கள். இவர்கள் கடந்த நாள்களில் 57 வது வயதில் மரணமடைந்து விட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

இவர்களின் குடும்பத்தில் அஹ்மதிய்யத் இவர்களின் தந்தையார் மதிப்பிற்குரிய முஹம்மத் தீன் ஸாஹிப் அவர்கள் மூலமாக வந்தது. அவர்கள் 1934-இல் 15 வயதில் காதியானுக்குச் சென்று ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் கையில் பைஅத் செய்தார்கள். மர்ஹூமா அல்லாஹ்வின் அருளால் மூஸியாக இருந்தார்கள். பின்விட்டுச் சென்றவர்களில், கணவர் மட்டுமின்றி ஒரு மகனும் 4 மகள்களும் இருக்கிறார்கள்.

இவர்களின் மகன் மதிப்பிற்குரிய வஜீஹுல்லாஹ் ஸாஹிப் செனிகாலில் முபல்லிஃக் ஆக இருக்கின்றார்கள். அங்கு மார்க்கத் தொண்டாற்றும் நல்வாய்ப்பு பெறுகிறார்கள். செயற்களத்தில் இருப்பதனால் தம் தாயாரின் ஜனாஸாவிலும் நல்லடக்கத்திலும் கலந்து கொள்ள முடியவில்லை.

முரப்பியான இவர்களின் மகன் வஜீஹுல்லாஹ் ஸாஹிப் எழுதுகிறார்கள்: என் தாயார் மிகவும் நல்ல வாழ்க்கை வரலாற்றைக் கொண்ட ஒரு பெண்மணியாக இருந்தார்கள். தொழுகை மற்றும் நோன்பைக் கடைபிடிப்பார்கள். திருக்குர்ஆனை முறையாக ஓதி வந்தார்கள். பிள்ளைகளையும் முழுமையாக கண்காணித்து வந்தார்கள். அஹ்மதிய்யா கிலாஃபத்துடன் பெரும் அன்பு கொண்டவராக இருந்தார்கள். எந்தவொரு பிரச்சனை அல்லது மகிழ்ச்சி பற்றி தெரிய வந்தாலும் காலத்தின் கலீஃபா அவர்களுக்குக் கடிதம் எழுது! என்று எனக்குக் கூறிவந்தார்கள். விருந்தினர்களுக்கு மனமகிழ்ச்சி ஏற்படுத்தக் கூடிய பெண்மணியாக தமது ஆற்றலுக்கு மீறி அவர்களுக்குத் தொண்டாற்றி வந்தார்கள். அஹ்மதி அல்லாத அண்டை அயலாருடனும் அன்புடன் நடந்து கொண்டார்கள். சில அண்டை அயலார் எதிர்த்தும் வந்தார்கள்; அவ்வாறு இருந்தும், இவர்கள் எப்பொழுதும் அண்டை அயலார்களான அவர்களுக்கான உரிமையை செலுத்தி வந்தார்கள்.

இவர்களின் கணவர் இன்ஆமுல்லாஹ் ஸாஹிப் கூறுகிறார்கள்:

என்னுடன் சிறந்த வாழ்வைக் கழித்தார்கள். வாழ்நாள் முழுவதும் எவ்வளவு ஜமாஅத் தொண்டுக்கு நல்வாய்ப்பு கிடைத்ததோ அவற்றில் எனக்கு முழுமையாக ஒத்துழைப்பு வழங்கினார்கள். ஜமாஅத் பணியின் காரணமாக நாள் முழுவதும் அல்லது இரவு முழுவதும் வீட்டை விட்டு வெளியே இருக்க வேண்டி வந்தால் ஒருபோதும் முறையிட்டதில்லை. பெரும் விருந்தோம்பல் செய்பவராக இருந்தார்கள். மரணத்துக்கு ஒரு மாதத்துக்கு முன்னர் கூட ஏறத்தாழ 22 ஜமாஅத் விருந்தினர்களுக்காகத் தாமே உணவு சமைத்தார்கள். ஏழைகளுக்கு சாத்தியமான எல்லா உதவிகளையும் செய்து வந்தார்கள். சந்தாக்களை செலுத்துவதில் தம் மர்ஹூம்கள் சார்பாகவும், சந்தா செலுத்தி வந்தார்கள். பிள்ளைகளுக்கான தர்பிய்யத்தையும் மிகச் சிறந்த முறையில் செய்வதற்கு முயற்சி செய்தார்கள். நீண்ட காலம் தமது வட்டாரத்தில் செகரட்டரீ மால் ஆக தொண்டாற்றினார்கள். மரணத் தருவாயிலும் இதே தொண்டில் பணிக்கப்பட்டிருந்தார்கள்.

இவர்களின் அண்ணன் கூறுகிறார்கள்:

என் சகோதரி அன்பு செலுத்தக் கூடியவராகவும், ஒவ்வொருவரிடமும் பரிவு காட்டக் கூடியவராகவும் இருந்தார்கள். சிறு வயதிலிருந்தே ஐவேளைத் தொழுகைகளைத் தொழுபவராகவும், தஹஜ்ஜுத் தொழக் கூடியவராகவும், கிலாஃபத்துடன் அளப்பெரிய நேசம் கொண்டவராகவும், திருக்குர்ஆனை முறையாக ஓதுபவராகவும் இருந்தார்கள். பிள்ளைகள் மற்றும் குடும்பத்தின் மற்ற பிள்ளைகள் யாராக இருந்தாலும் இவர்களின் வீட்டுக்குச் செல்வார்கள். அவர்களையும் தொழுகையைக் கடைபிடிக்கச் செய்வார்கள். மேலும், திலாவத் செய்யுமாறு வலியுறுத்துவார்கள்.

ஜமாஅத் அல்லாதவர்களுடனும் நல்ல தொடர்பு இருந்தது. அஹ்மதி அல்லாத அண்டை அயலாரான ஒரு பெண் கூறுகிறார்:

என்னுடன் 20 வருடங்களாக அவர்கள் தொடர்பு கொண்டிருந்தார்கள். என்னுடன் சகோதரியைப் போன்று நடந்து கொண்டார்கள். என் பிள்ளைகளுடன் தாயைப் போன்று நடந்து கொண்டார்கள். அவர்களை அன்னை என்றே என் பிள்ளைகளும் அழைத்து வந்தார்கள். ஒவ்வொரு பணியிலும் எனக்கு எப்பொழுதும் சிறந்த ஆலோசனை வழங்கி வந்தார்கள்.

நல்லியல்பு கொண்ட ஜமாஅத் அல்லாத மக்களும் இருக்கிறார்கள். அவர்கள் தொடர்பும் வைக்கிறார்கள். பிறகு அதை மதிக்கவும் செய்கிறார்கள்.

ரச்சினா டவுனின் லஜ்னா தலைவி கூறுகிறார்கள்: மர்ஹூமாவின் மரணத்தினால், எங்களுடைய மஜ்லிஸிலிருந்து மிகவும் கலப்பற்ற மற்றும் ஜமாஅத் அமைப்புடன் நன்றியுணர்வுடன் இருந்த லஜ்னா உறுப்பினர் ஒருவர் சென்று விட்டார். ஏறத்தாழ 20 ஆண்டுகளாக செகரட்டரீ மால் ஆக பணியாற்றி வந்தார்கள். மிகவும் கலப்பற்ற தன்மையுடன் பணிபுரிந்து வந்தார்கள். ஜமாஅத் திட்டங்களில் தாமும் அதிகப்படியாக பங்கெடுத்து வந்தார்கள். நிலைமைகள் எப்படி இருந்தாலும் சரி; யாரையும் வெறுங்கையுடன் அனுப்ப மாட்டார்கள்.வெயில் காலங்களில் ஒவ்வொரு வெயில் காலத்திலும் என்று இவர்கள் கூறுகிறார்கள் - மற்ற பெண் பிள்ளைகளும் எழுதியிருக்கின்றார்கள்:

மகள்களும் எழுதியிருக்கின்றார்கள். அதாவது ஒவ்வொரு வாரமும் வியாழக்கிழமை அன்று நோன்பு வைத்து வந்தார்கள். இவர்களின் வீட்டில் ஏதாவது நிகழ்ச்சி வைக்கப்பட்டால் திறந்த மனதோடு அதை ஏற்றுக் கொள்வார்கள். அதற்கு விருந்தோம்பலும் செய்வார்கள்.

அல்லாஹ் இவர்களுக்கு பாவமன்னிப்பு வழங்கி இவர்களோடு கருணையுடன் நடந்து கொள்வானாக! ஒரு மகன் முரப்பி ஆவார். நான் அவரைப் பற்றிக் கூறியிருந்தேன். அவர் செயற்களத்தில் இருக்கிறார். அங்கு இருப்பதன் காரணத்தினால் அவரால் ஜனாஸாவில் கலந்து கொள்ளக் கூட முடியவில்லை. எல்லாம் வல்ல அல்லாஹ் அவருக்கும் பொறுமையையும், மனத் துணிவையும் வழங்குவானாக! இந்த பிள்ளைகள் அனைவரையும் அவர்களுடைய துஆக்களுக்கு உரியவர்களாக ஆக்குவானாக!

தமிழாக்கம்
மவ்லவி அத்தாவுல் முஃக்னீ

* * * * *

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

அன்னார் (ஸல்) ஒரு சமுதாயத்தை காட்டுமிராண்டித்தனமான வாழ்க்கையை நடத்துபவர்களாகவும், விலங்குகளின் இயல்பை கொண்டவர்களாகவும் இருப்பதைக் கண்டு அவர்களுக்கு மனித பழக்கவழக்கங்களை கற்றுக் கொடுத்தார்கள். வேறு சொற்களில் கூறுவதாக இருந்தால் இவ்வாறும் கூறலாம்: அதாவது விலங்குகளை மனிதர்களாக ஆக்கினார்கள். பின்னர் மனிதர்களை கல்வி அறிவுடைய மனிதர்களாக மாற்றினார்கள். பிறகு கல்வியறிவுடைய மனிதனை இறைவனோடு தொடர்பு கொண்ட மனிதர்களாக ஆக்கினார்கள். மேலும் ஆன்மிகத்தின் தன்மையை அவர்களிடத்தில் அன்னார் (ஸல்) ஊதினார்கள். உண்மையான இறைவனுடன் அவர்களுக்கு தொடர்பை ஏற்படுத்திக் கொடுத்தார்கள். அவர்கள் இறைவழியில் ஆடுகளைப் போன்று பலியிடப்பட்டனர். எறும்புகளைப் போன்று கால்களுக்கு கீழ் நசுக்கப்பட்டனர். ஆயினும் அவர்கள் ஈமானை கைவிடவில்லை. மாறாக, ஒவ்வொரு துன்பத்தின்போதும், அவர்கள் பாதங்களை முன்நோக்கி வைத்தனர். எனவே சந்தேகத்திற்கிடமின்றி நமது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஆன்மிகத்தை நிலைநாட்டுவதின் அடிப்படையில் இரண்டாவது ஆதமாக இருந்தார்கள். அவர்கள் மூலமாகவும் அவர்களின் ஊடகமாகவும் தான் எல்லா மனித சிறப்புகளும் அதன் முழுமையை அடைந்தன. எல்லா நல்ல ஆற்றல்களும் தத்தமது பணியில் ஈடுபட்டன. மனித இயல்பின் எந்தவொரு கிளையும் அவர்களிடமிருந்து பயனடையாமல் இருந்ததில்லை. அன்னாரது நீரால் செழிப்படையாமல் இருந்ததில்லை. நபித்துவம் காலத்தின் அடிப்படையில் மட்டும் அன்னார் மூலம் நிறைவடையவில்லை. காலத்தின் பின்னால் வந்ததுடன் மட்டும் அன்னாருடன் நபித்துவம் முழுமை பெறவில்லை. இன்னும் கூறப்போனால், அவர்கள் மூலமாகவே நிறைவு பெற்றிருப்பது இதற்கான காரணமாக இருக்கின்றது. ஏனெனில், அனைத்து இறைப் பண்புகளின் வெளிப்பாடாக அன்னார் (ஸல்) இருந்தார்கள்.(லெக்சர் சியால்கோட் ,ரூஹானி கஸாயின் தொகுதி 20, பக்கம் 206 )

**நபிமொழியிலிருந்து...**

**சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)**

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

# ஜுமுஆ பேருரை

**மக்கா வெற்றியின் பின்னணியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு**

இறைத் தூதர் (ஸல்) அவர்கள் மதீனாவில் இருந்து மக்காவிற்கு புறப்பட்டபோது,

எனது இறைவா! நான் உன்னிடம் துஆ செய்கின்றேன்; நீ மக்காவாசிகளின் காதுகளை செவிடாக்கி விடுவாயாக ; மேலும், அவர்களின் உளவாளிகளை குருடாக்கி விடுவாயாக! அவர்கள் எங்களை பார்க்கவும் கூடாது; மேலும் அவர்களின் செவிகள் வரை எங்களது எந்த விஷயமும் அவர்களை சென்றடையவும் கூடாது என்று துஆ செய்தார்கள்.

அன்னார் (ஸல்) புறப்பட்டார்கள். அப்போது மதீனாவில் நூற்றுக்கணக்கான நயவஞ்சகர்கள் இருந்தனர். ஆயினும், பத்தாயிரம் நபர்களைக் கொண்ட படை மதீனாவிலிருந்து புறப்படுகின்றது; மேலும் எந்த செய்தியும் மக்காவிற்கு கிடைக்கவில்லை.

تَاللّٰهِ لَقَدْ اٰثَرَكَ اللّٰهُ عَلَيْنَا وَاِنْ كُنَّا لَخٰطِئِيْنَ

என்று அபூ ஸுஃப்யான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் கூறினார்.

பொருள்: நாங்கள் அல்லாஹ்வின் மீது சத்தியமாக கூறுகின்றோம்; அல்லாஹ் நிச்சயமாக தங்களுக்கு எங்கள் மீது மேன்மை வழங்கியுள்ளான்; மேலும் நாங்கள் நிச்சயமாக குற்றமிழைத்தவர்கள் ஆவோம். **அப்போது,**

لَا تَثْرِيْبَ عَلَيْكُمُ الْيَوْمَ يَغْفِرُ اللّٰهُ لَكُمْ وَهُوَ اَرْحَمُ الرّٰحِمِيْنَ

**என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அறிவித்தார்கள்.**

இன்று உங்கள் மீது எவ்வகையான குற்றச்சாட்டும் இருக்காது;மேலும் அல்லாஹ்வும் உங்களை மன்னித்து விடுவான். மேலும் அவன் கருணை கொண்ட அனைவரையும் அதிக கருணை காட்டக் கூடியவன் ஆவான்

## ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்

(அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 20 ஜுன் 2025** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1404 ஆண்டு **இஹ்ஸான்** மாதம் **20 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ

وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ○

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○

صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

**(சென்ற இதழின் தொடர்ச்சி) ........ ....**

உதாரணமாக, ஹுனைன் போரில் முஸ்லிம்களுக்கு பின்னடைவு ஏற்பட்ட போது,அபூ ஸுஃப்யான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய குதிரையின் கடிவாளத்தைப் பிடித்திருந்தார்; மேலும் பெருமானார் (ஸல்) அவர்களுடன் அன்னாருக்கு முன்பு நின்று கொண்டிருந்தார் என்று எழுதப்பட்டுள்ளது. சில வரலாற்றாசிரியர்கள் இது அபூ ஸுஃப்யான் பின் ஹர்ப் என்று பொருள் கொண்டுள்ளார்கள். அதேநேரம் வரலாற்றாசிரியர்கள் இவ்வாறும் கூறுகின்றார்கள்:

அவர் அபூ ஸுஃப்யான் பின் ஹர்பு கிடையாது; மாறாக, அபூ ஸுஃப்யான் பின் ஹாரிஸாக அவர் இருந்தார். மேலும், இவர் ஹுஸூர் (ஸல்) அவர்களின் பால்குடி சகோதரராகவும் இருந்தார். ஏனெனில், ஹலீமா ஸஅதியா அவர்கள் அன்னாருக்கும் பாலூட்டியிருந்தார்கள். அன்னாருக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் அதிக நேசம் இருந்தது. ஆனால், அன்னார் (ஸல்) நபித்துவ வாதம் செய்தபோதோ இவர்கள் கடும் எதிரியாகவும், எதிராளியாகவும் ஆகிவிட்டார்கள். இவர்கள் மக்காவின் பெரும் கவிஞர்களில் கணக்கிடப்பட்டார்கள். மேலும், அந்த எதிர்ப்பின் காரணமாக அன்னார் (ரலி) ஹுஸூர் (ஸல்) அவர்களின் மேன்மையை அவமதித்தவாறு மிகவும் மோசமான கவிதைகளையும் கூறியிருந்தார்கள். ஹஸ்ரத் ஹஸ்ஸான் பின் ஸாபித் (ரலி) அவர்கள் அன்னாருடைய மோசமான கவிதைகளுக்கு பதிலடி கொடுத்து வந்தார்கள். மேலும், அன்னாருடைய கவிதைகளில், அபூ ஸுஃப்யானிற்கு இந்த விஷயத்தை எட்ட வைத்து விடுங்கள் என்று எங்கெல்லாம் இந்த கூற்று வருகின்றதோ அதன் பொருளும் பொதுவாக அபூ ஸுஃப்யான் பின் ஹாரிஸாக இருந்து வந்தார்.

தாரீகுல் கமீஸில் இவ்வாறு வருகின்றது: تَاللّٰهِ لَقَدْ اٰثَرَكَ اللّٰهُ عَلَيْنَا وَاِنْ كُنَّا لَخٰطِئِيْنَ என்று அபூ ஸுஃப்யான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜராகி கூறினார். இது ஸூரா யூஸுஃப் வசனம் 92 ஆகும்.

பொருள்; நாங்கள் அல்லாஹ்வின் மீது சத்தியமாக கூறுகின்றோம்; அல்லாஹ் நிச்சயமாக தங்களுக்கு எங்கள் மீது மேன்மை வழங்கியுள்ளான்; மேலும் நாங்கள் நிச்சயமாக குற்றமிழைத்தவர்கள் ஆவோம் என்று அவர்கள் கூறுகின்றனர். அப்போது அன்னார் (ஸல்) அபூ ஸுஃப்யானிடம்

لَا تَثْرِيْبَ عَلَيْكُمُ الْيَوْمَ يَغْفِرُ اللّٰهُ لَكُمْ وَهُوَ اَرْحَمُ الرّٰحِمِيْنَ

என்று கூறினார்கள்.

(யூஸுஃப்: 93)

இன்று உங்கள் மீது எவ்வகையான குற்றச்சாட்டும் இருக்காது;மேலும் அல்லாஹ்வும் உங்களை மன்னித்து விடுவான். மேலும் அவன் கருணை கொண்ட அனைவரையும் அதிக கருணை காட்டக் கூடியவன் ஆவான். அறிவிப்பிற்கு ஏற்ப, ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் அபூ ஸுஃப்யானிடம் கூறியிருந்தார்கள்:

நீங்கள் இவ்வாறு இந்த வாக்கியங்களை கூறியவாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜராகி மன்னிப்பு வேண்டுங்கள்!

அறிவிப்பில் இவ்வாறு வருகின்றது: அந்நேரத்தில் வெட்கத்தின் காரணமாக, அபூ ஸுஃப்யான் தனது தலையை ஏறெடுத்து பார்க்க முடியாதபடி இருந்தார். அதாவது அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சமூகத்தில் முன் நிறுத்தப்பட்டபோது.

எவ்வாறிருப்பினும், முன்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கண்ணியத்திற்கு எதிராக மோசமான கவிதைகளை கூறிவந்த அபூ ஸுஃப்யான் பின் ஹாரிஸ் தற்போது இஸ்லாத்தைத் தழுவிய பிறகு அன்னாருடைய கவிதைகள் அனைத்தும் இறைத் தூதர் (ஸல்)அவர்கள் மீதான அன்பு மற்றும் நேசத்தால் நிறைந்திருந்தது. மேலும் அன்னார் இஸ்லாத்தைத் தழுவிய பிறகு, நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை புகழ்ந்து ஒரு கவிதை எழுதியிருந்தார்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சாயலுடன் எந்த நபர்களின் சாயல் ஒத்ததாக இருந்ததோ அவர்களில் ஒருவராக ஹஸ்ரத் அபூ ஸுஃப்யான் பின் ஹாரிஸும் இருந்தார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அன்னாருக்கு சொர்க்கத்திற்கான நற்செய்தி வழங்கினார்கள். அன்னார் (ரலி) ஸஹாபிகளில் ஒருவராக கணக்கிடப்பட்டு வந்தார்கள். அவர்கள் இஸ்லாத்தில் நிலைத்திருந்தார்கள். மரணத்திற்கு மூன்று நாட்கள் முன்னர் தாமே தமது மண்ணறையை தோண்டினார்கள். மேலும், மரணத்திற்கான நேரம் வந்தபோது, எனக்காக அழாதீர்கள்; ஏனெனில், நான்

இஸ்லாத்தை ஒப்புக் கொண்டதில் இருந்து நான் என்னை எந்தவொரு பாவத்திலிருந்தும் விலக்கி வைத்துள்ளேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணத்தின்போது, அன்னார் ஒரு வேதனை மிகுந்த கவிதைகளில் தமது உணர்வுகளை வெளிப்படுத்தினார்கள்.

அதன் சில வரிகளின் மொழியாக்கம் இவ்வாறாகும்:

நான் மிகவும் நிம்மதி இழந்திருக்கின்றேன்; ஏனெனில், எனது இரவு முடிவதில்லை. மேலும், துன்பத்திற்குள்ளான நபரின் இரவோ நீண்டு கொண்டே இருக்கின்றது. மேலும், அழுகை எனக்கு நிம்மதியை தருகின்றது. மேலும், இந்த அழுகை முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட துன்பத்தோடு ஒப்பிடுகையில் ஒன்றுமற்றதாகும். எந்த நாள் மாலை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணம் நிகழ்ந்ததோ அந்த நாள் மாலை எமது துன்பம் மேலும் அதிகரித்து விட்டது. மேலும் அதிகமாகி விட்டது.

நமது நிலம் அதன் மீது வந்துள்ள இந்த துன்பத்தின் காரணமாக கவிழ்ந்து விடுவது சமீபமாகும்.


அடுத்து எழுதியுள்ளார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணத்தின் காரணமாக வஹீ நின்று விட்டது. காலையும் மாலையும் ஜிப்ராயீல் அவர்கள் கொண்டு வந்த திருக்குர்ஆன் இறங்குவது முடிந்து விட்டது. ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களை நோக்கி விளித்தவாறு, ஒரு கவிதையில் இவ்வாறு கூறினார்கள்:

ஃபாத்திமாவே! நீ இந்த சந்தர்ப்பத்தில் அழுதால் உனது அழுகை சரியானதாகும். நீ அழவில்லை என்றால், இதுவே சரியான வழிமுறையாகும். எனவே நீ பொறுமையின் அடைக்கலத்தில் சென்று விடு. ஏனெனில், அதில் இறைவன் புறமிருந்து நற்கூலி இருக்கின்றது. அது மாபெரும் அருளாகும். மேலும் நீ உனது தந்தை, இறைத் தூதர் (ஸல்) அவர்களின் சிறப்புகளை எடுத்துரைப்பாயாக! மேலும் அன்னாரை புகழ்வதிலிருந்து சோர்ந்து விடாதே. ஏனெனில், எந்த அளவிற்கு புகழ்ந்தாலும் அந்த புகழ்ச்சி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மேன்மையை எடுத்துரைத்து விட முடியாது. அந்தக் கவிதைகளில் அன்னார் கூறுகின்றார்கள்:

فَقَبْرُ أَبِيكِ سَيِّدُ كُلِّ قَبْرٍ وَفِيهِ سَيِّدُ النَّاسِ الرَّسُولُ

பொருள்: ஃபாத்திமாவே! உமது தந்தையின் கபர் அனைத்து கபர்களின் தலைமை ஆகும். ஏனெனில், இதில் இறைத் தூதர் (ஸல்) அவர்கள் நல்லடக்கம் செய்யப்பட்டள்ளார்கள். அவரோ அனைத்து மனிதர்களுக்கும் தலைவராக இருந்தார்கள். ஹஸ்ரத் அபூ ஸுஃப்யானின் மரணம் ஹிஜ்ரீ 15-ம் ஆண்டு, அல்லது ஹிஜ்ரீ 20-ம் ஆண்டு நிகழ்ந்திருந்தது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அன்னாரின் ஜனாஸா தொழுகையை தொழ வைத்தார்கள்.


A. SAMSUL ALAM
A. ABDUL RAHIM



Dealers of Natural Precious & Semi-Precious Gemstones

TOONICE
DEALERS OF PRECIOUS & SEMI-PRECIOUS GEMSTONES
No. 100/59-A, 1st Floor, South Thaikkat Street Melapalayam, Tirunelveli-627005 Tamil Nadu, India
+91 9659389953 toonicegems@gmail.com

Al-Nida GEMS
No. 1/B3, 1st Floor Village Road Balaji Nagar Extension Puzhuthivakkam, Chennai-600091 Tamil Nadu, India
+91 9042150339 alnidagems@gmail.com

HG GEMS
HANIYAHANA GEMS CO., LTD.
No. 191/16, Soi Puttha Osot Siphraya, Bangrak Bangkok - 10500 Thailand
+66 638751327 gemscertify22@gmail.com


இரண்டாவது தலைவராக இருந்தவர் அப்துல்லாஹ் பின் அபூ உமைய்யா ஆவார். அன்னாருடைய சுருக்கமான அறிமுகம் இதுவாகும். அன்னாரின் பெயர் ஹுஸைஃபா என்று வருகின்றது. இவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மாமி ஆதிகா அவர்களின் மகனாக இருந்தார்கள். இந்த தொடர்பின் காரணமாக அன்னார் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மாமி மகனாகவும் இருந்தார்கள். மேலும், உம்முல் மூஃமினீன் ஹஸ்ரத் உம்மே ஸலமாஃ (ரலி) அவர்களின் சகோதரராக இருந்தார்கள். அன்னார் (ஸல்) நபித்துவ வாதம் செய்தபோது, இவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்)அவர்களின் கடுமையான எதிரியாக ஆகிவிட்டார்கள். மேலும், எதிர்ப்பில் மிகவும் முன்னேறி சென்று விட்டார்கள்.

وَقَالُوا لَن نُّؤْمِنَ لَكَ حَتَّىٰ تَفْجُرَ لَنَا مِنَ الْأَرْضِ يَنبُوعًا

என்று திருக்குர்ஆனில் வருகின்றது. (17:91)

பொருள்: மேலும் நீர் எங்களுக்காக பூமியிலிருந்து ஏதாவது நீரூற்றை பீறிட்டு வரச் செய்யாத வரை நாங்கள் ஒருபோதும் உமது கூற்றை ஏற்க மாட்டோம் என்று அவர்கள் கூறிவிட்டனர்.

இவ்வாறு கூறக் கூடியவராக இதே அப்துல்லாஹ் பின் அபூ உமைய்யா அவர்களே இருந்தார்கள் என்று கூறப்படுகின்றது. ஆனால், இஸ்லாத்தை ஒப்புக் கொண்ட பிறகு அவர்கள் மிகுந்த அர்ப்பணிப்புடன் ஹுனைன் போரில் பங்கு பெற்றார்கள். மேலும், தாயிஃப் போரில் ஒரு அம்பு தாக்கியதால் ஷஹீதானார்கள்.

(அஸதுல் ஃகாபா,தொகுதி 6, பக்கம் 141, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத்)

இந்தப் போரில் ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் இஸ்லாமியப் படையில் பங்கு பெற்றது தொடர்பாக இவ்வாறு எழுதப்பட்டுள்ளது:

இறைத் தூதர் (ஸல்) அவர்கள் மக்காவை நோக்கி பயணத்தை தொடங்கியபோது, ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) மதீனாவின் பக்கம் ஹிஜ்ரத் செய்வதற்காக மக்காவிலிருந்து பயணம் மேற்கொள்வதற்கான எண்ணம் கொண்டார்கள். ஹஸ்ரத் அப்பாஸ் ஜுஹ்ஃபாவில் இறைத் தூதர் (ஸல்) அவர்களை சந்தித்தார்கள். ஜுஹ்ஃபா மக்காவிலிருந்து எழுபத்தி ஆறு மைல் தொலைவில் அமைந்துள்ளது. ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் தமது பொருட்களை மதீனாவிற்கு அனுப்பி விட்டார்கள். மேலும், அன்னார் மக்காவை நோக்கி ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடன் பயணத்தை தொடங்கிவிட்டார்கள். (ஸுபுலுல் ஹுதா, தொகுதி 5, பக்கம் 213, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத்)

ஹஸ்ரத் அப்பாஸ் பின் அப்துல் முத்தலிப் (ரலி) அவர்களின் சுருக்கமான அறிமுகம் இவ்வாறாகும்:

ஹஸ்ரத் அப்பாஸ் பின் அப்துல் முத்தலிப் (ரலி) அவர்கள் இறைத் தூதர் (ஸல்) அவர்களின் சிறிய தந்தையாராக இருந்தார்கள். இறைத் தூதர் (ஸல்) அவர்களை விட இரண்டு அல்லது மூன்று வருடம் மூத்தவராக இருந்தார்கள். தமது மகன் ஃபஸ்ல் பின் அப்பாஸ் அவர்களின் காரணமாக அபூ அல்ஃபஸ்ல் என்ற சுட்டுப் பெயரால் பிரபல்யமடைந்திருந்தார்கள். ஹஸ்ரத் அபூதாலிப் அவர்களுக்குப் பிறகு ஸிகாயா எனும் ஹஜ் செய்யக் கூடியவர்களுக்கு குடி தண்ணீர் கொடுக்கும் பொறுப்பு அன்னாருடையதாக இருந்தது. உக்பா எனும் இடத்தில் அன்ஸார் ஸஹாபிகள் பைஅத் செய்தபோது, ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடன் இருந்தார்கள். ஹுனைன் போரில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடன் உறுதிப்பாட்டுடன் நிலைநின்றார்கள். ஹிஜ்ரீ முப்பது அல்லது முப்பத்தி ஐந்தாவது ஆண்டு அன்னாருடைய மரணம் நிகழ்ந்தது. ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை தழுவியது தொடர்பாக பல்வேறு அறிவிப்புகள் இருக்கின்றன. சிலரை பொருத்த வரை அன்னார் ஹிஜ்ரத்திற்கு முன்பு இஸ்லாத்தை தழுவி விட்டிருந்தார்கள். சிலரை பொருத்த வரை பத்ர் போருக்கு முன்பு இஸ்லாத்தை ஒப்புக் கொண்டிருந்தார்கள். மேலும், சிலரை பொருத்த வரை கைபர் போருக்கு அருகில் இஸ்லாத்தை தழுவியிருந்தார்கள்.

மேலும் சிலர் கூறுகின்றார்கள்: மக்கா வெற்றிக்கு முன்பு இஸ்லாத்தை ஒப்புக் கொண்டார்கள். ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்களின் ஆய்வுக்கு ஏற்ப பைஅத்தே உக்பா ஸானியா வரை அன்னார் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டிருக்கவில்லை. எனவே அன்னார் (ரலி) உக்பா ஸானியா தொடர்பாக இவ்வாறு எழுதுகின்றார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இன்னும் இணை வைப்பாளராக இருந்த அதே நேரம் அன்னார் (ஸல்) மீது நேசம் கொண்டிருந்த தமது சிறிய தந்தையாரான அப்பாஸ் அவர்களை உடன் அழைத்துக் கொண்டார்கள். ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் பத்ர் போருக்கு முன்பு வரை இஸ்லாத்தை ஒப்புக் கொண்டிருப்பார்கள் என்பதே பெரும்பாலும் சாத்தியமான கருத்தாக உள்ளது. மக்காவிலேயே இஸ்லாத்தை ஒப்புக் கொண்டு விட்டார்கள்; ஆனால், மக்கா மற்றும் மக்காவாசிகளின் செய்திகள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வரை சென்றடைந்து கொண்டிருக்க வேண்டும் என்பதற்காக அன்னார் (ரலி) இஸ்லாத்தை வெளிப்படுத்தாமல் இருந்தார்கள் என்ற கருத்தில் அனைத்து வாழ்க்கை வரலாற்றாசிரியர்களும் ஒருமித்த கருத்து கொண்டுள்ளனர். இறைத் தூதர் (ஸல்) அவர்கள், நீங்கள் (ரலி) மக்காவில் தங்கியிருப்பதே மிகவும் பயனுள்ளதாகும் என்று ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்களிடம் கூறியிருந்தார்கள் என்றும் அறிவிப்பில் கிடைக்கின்றது.

(அல்இஸ்தீஆப் ஃபீ மஃருஃபத்துல் அஸ்ஹாப், தொகுதி2, பக்கம் 810 - 817)

மக்கா வெற்றி தொடர்பாக ஹஸ்ரத் அபூ பக்ர் (ரலி) அவர்களின் ஒரு கனவும் இருக்கின்றது. அதனைப் பற்றிய குறிப்பு இவ்வாறு கிடைக்கின்றது. அதாவது, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இறைத் தூதர் (ஸல்) அவர்களின் சமூகத்தில் தமது ஒரு கனவை எடுத்துரைத்தவாறு கூறினார்கள்:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! எனக்கு கனவு காட்டப்பட்டுள்ளது; மேலும், நான் கனவில் தங்களை கண்டேன். மேலும், நாம் மக்காவிற்கு அருகில் சென்றுவிட்டோம். ஒரு பெண் நாய் குரைத்தவாறு நம் பக்கம் வந்தது. பின்னர் அதற்கு அருகில் நாம் சென்று விட்டபோதோ அது முகங்குப்புற விழுந்து விட்டது. மேலும் அதனிடமிருந்து பால் வெளியேறியது.

அதற்கு, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இந்த மக்காவாசிகளின் தீங்கானது பாலாகி விட்டது.

மேலும் நன்மை அருகில் வந்து விட்டது. அன்னார் (ஸல்) இவ்வாறு அதற்கு விளக்கம் கொடுத்தார்கள். அதாவது அவர்கள் உமது நெருக்கத்தை சுட்டிகாட்டி உமது அடைக்கலத்தில் வருவார்கள். மேலும், நீர் அவர்களில் சிலரை சந்திப்பீர்கள். பின்னர், நீர் அபூ ஸுஃப்யானைக் கண்டால் அவரை கொலை செய்து விட வேண்டாம் என்று அன்னார் (ஸல்) ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் கூறியிருந்தார்கள். (தலாயிலுன் நுபுவ்வா லில்பைஹக்கீ, தொகுதி 5, பக்கம் 48)

எவ்வாறிருப்பினும், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய படையின் பயணம் தொடர்ந்து கொண்டிருந்தது. மேலும் மர்ருஸ் ஸஹ்ரான் என்ற இடத்தில் அன்னார் (ஸல்) முகாமிட்டார்கள். இவ்வாறு எழுதப்பட்டுள்ளது:

அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சிறந்த இராணுவ செயல் திட்டம் மற்றும் துஆக்களின் காரணமாக எவ்வளவு பெரிய அற்புதம் வெளிப்பட்டது என்றால், மதீனாவிலிருந்து புறப்படக் கூடிய படை சுமார் நானூறு கி.மீ பயணம் செய்தவாறு மக்காவிலிருந்து சரியாக ஐந்து மைல் தொலைவில் முகாமிட்டிருந்தது. ஆனால், அதுவரை இன்னும் மக்காவாசிகளின் காதுகளுக்கு செய்தி சென்றடைந்திருக்கவில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இஷா நேரத்தில் மர்ருஸ் ஸஹ்ரானில் முகாமிட்டார்கள். அது மக்கா மற்றும் உஸ்ஃபானுக்கு இடையில் ஐந்து மைல் தொலைவில் அமைந்துள்ள ஓர் இடமாகும். அன்னார் (ரலி) தமது ஸஹாபிகளுக்கு கட்டளையிட்டபோது, அவர்கள் பத்தாயிரம் ஒளிவிளக்குகளை ஏற்றினார்கள். அன்னார் (ஸல்) ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை படையை கண்காணிப்பதற்காக நியமித்தார்கள். (ஸுபுலுல் ஹுதா, தொகுதி 5, பக்கம் 213-214,தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத்)

இஸ்லாமியப் படை எவருக்கும் தெரியாமல் மக்காவை சென்றடைவதற்கு ஏற்பாடு எப்படி நிகழ்ந்தது? என்பது பற்றி ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இவ்வாறு எழுதுகின்றார்கள். இவ்வாறு கூறுகின்றார்கள்;

அஹ்ஸாப் போரின் வரலாறைத் தவிர இவ்வளவு பெரிய படை அரேபிய வரலாற்றில் தயாரகியிருக்கவில்லை. அஹ்ஸாப் போரில் பத்தாயிரம் நபர்கள் இருந்தனர். ஒருவகையில் அரேபிய வரலாறு இவ்வளவு பெரிய படைக்கு முஸ்லிம்களுக்கான இரண்டாவது உதாரணமாக இருந்தது. ஆனால், மதீனாவில் இருந்து இவ்வளவு பெரிய படை புறப்படுகின்றது. மேலும், எவருக்கும் அதைப் பற்றிய தகவல் கிடைக்கவில்லை. அடுத்து, எனது முரசு அறையும் இடத்தில் நான் முரசொலிக்கின்றேன்; மேலும் அவர்கள் முரசொலிக்கும் இடத்தை உடைக்கின்றேன் என்பதையும் அல்லாஹ் அற்புதமான முறையில் காட்டினான். ஆக, இறைத் தூதர் (ஸல்) அவர்கள் புறப்பட்டபோது, அன்னார் (ஸல்) கூறினார்கள்:

எனது இறைவா! நான் உன்னிடம் துஆ செய்கின்றேன்; நீ மக்காவாசிகளின் காதுகளை செவிடாக்கி விடுவாயாக ; மேலும், அவர்களின் உளவாளிகளை குருடாக்கி விடுவாயாக! அவர்கள் எங்களை பார்க்கவும் கூடாது; மேலும் அவர்களின் செவிகள் வரை எங்களது எந்த விஷயமும் சென்றடையவும் கூடாது.

ஆக, அன்னார் (ஸல்) புறப்பட்டார்கள். மதீனாவில் நூற்றுக்கணக்கான நயவஞ்சகர்கள் இருந்தனர். ஆயினும், பத்தாயிரம் நபர்களைக் கொண்ட படை மதீனாவிலிருந்து புறப்படுகின்றது; மேலும் எந்த செய்தியும் மக்காவிற்கு கிடைக்கவில்லை.

(ஸேரே ரூஹானீ,அன்வாருல் உலூம், தொகுதி 24, பக்கம் 262)

அங்கு ஏழாயிரம் போர் வீரர்களே இருந்தனர். எனினும், அது மாபெரும் எண்ணிக்கையாக இருந்தது. மேலும், செல்லும் வழியில் இணைந்து கொண்டே சென்றனர். ஆனால், அதன் பின்னரும் மதீனாவாசிகளுக்கு அந்த செய்தியை சென்றடைய செய்வதற்கு வாய்ப்பு கிடைக்கவில்லை. ஏற்கனவே எடுத்துரைக்கப்பட்டது போன்று, அதுவரை குறைஷியர்கள் அல்லது மக்காவாசிகளுக்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் புறப்பாடு இன்னும்கூறப்போனால் மக்கா வரை வந்தடைந்த எந்த செய்தியும் கூட கிடைக்கவில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் மீது தாக்குதல் தொடுப்பார்கள் என்ற கவலை அவர்களுக்கு நிச்சயமாக இருந்தது. ஆனால், முஸ்லிம்களால் தங்கள் மீது தாக்குதல் தொடுக்க முடியும் என்ற நம்பிக்கை அவர்களுக்கு இருக்கவில்லை. எனினும், மக்காவாசிகள் நிச்சயமாக ஓரளவிற்கு எச்சரிக்கை அடைந்திருந்தார்கள். மேலும் அவர்கள் இரவு நேரத்திலும் அக்கம்பக்கத்து நிலைமைகளை பார்ப்பதற்காக சுற்றி வந்து கொண்டிருந்தனர். இதே போன்று அபூ ஸுஃப்யான் மக்காவின் இரண்டு தலைவர்கள் ஹக்கீம் பின் ஹிஸாம் மற்றும் புதைல் பின் வர்காஃ ஆகியோருடன் சுற்றி வந்து கொண்டிருந்தார். படை, கூடாரம் மற்றும் நெருப்பு போன்றவற்றை அவர்கள் கண்டனர். ஒருவகையில் அவை அரஃபாத்தின் நெருப்பாக இருந்தது. தற்போது அவர்கள் தங்களுக்குள் ஊகம் செய்தவாறு பனூ கஅப் அதாவது குஸாஆ கோத்திரமாக இருப்பார்கள் என்று பேசிக் கொண்டனர். அவர்களை சமீபத்தில் நிகழ்ந்த போரானது கோபமூட்டிவிட்டது என்றும் பேசிக் கொண்டனர். பின்னர் சுயமே பேசிக் கொண்டனர் ; மேலும் அனுமானம் செய்து கொண்டிருந்தார்கள். அதாவது இவ்வளவு பெரிய எண்ணிக்கை அவர்களுடையதாக இருக்க முடியாது.எனவே அவர்கள் கிடையாது என்று அவர்கள் பேசிக் கொண்டனர். பின்னர், பனூ ஹவாஸின் கோத்திரமாக இருப்பார்கள் என்று அவர்கள் கூறத் தொடங்கினர். அவர்களாக இருக்க முடியாது அவர்கள் சுயமே மறுத்துக் கூறிவிட்டனர். இதே போன்று அவர்கள் குதிரைகள் கணைப்பது மற்றும் ஒட்டகங்களின் சப்தத்தைக் கேட்டனர். இவை அனைத்தும் அவர்களை மிகவும் கடுமையாக அச்சுறுத்தி விட்டது.

(ஸுபுலுல் ஹுதா,தொகுதி 5, பக்கம் 213 - 214, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத்)

தற்போது இந்த விஷயங்கள் பேசப்பட்டுக் கொண்டிருந்தன. அந்நிலையில், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உளவாளிகள் சுற்றுப்புறத்தின் நிலைமைகளை ஆய்வு செய்தவாறு பாதுகாப்பு கொடுத்துக் கொண்டிருந்தவர்களை பிடித்து விட்டனர். மேலும் அவர்களை ஹுஸுர் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜர்படுத்துவதற்காக கொண்டு சென்று விட்டனர். ஓர் அறிவிப்பின் அடிப்படையில், அல்லாஹ் ஆன்மிக் காட்சியின் வடிவில் அபூ ஸுஃப்யான் அருகில் வந்த செய்தியை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு வழங்கி இருந்தான்.

எனவே ஹஸ்ரத் அபூ லைலா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நாங்கள் மர்ருஸ் ஸஹ்ரான் என்ற இடத்தில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடன் இருந்தோம். அப்போது, அபூ ஸுஃப்யான் மக்காவிற்கு அருகில் உள்ள பள்ளத்தாக்கான அராக் என்ற இடத்தில் இருக்கின்றார்; அவரை பிடித்து வாருங்கள் என்று அன்னார் (ஸல்) கூறினார்கள்: நாங்கள் அங்கு சென்றோம்.மேலும் அவரை பிடித்து விட்டோம்.

இப்னு உக்பா எழுதியுள்ளார்:

அபூஸுஃப்யான், ஹக்கீம் பின் ஹிஸாம் மற்றும் புதைல்பின் வர்காஃ ஆகியோருக்கு இதை பற்றி எதுவும் தெரியாமல் இருந்தது. எந்த அளவுக்கு என்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எவர்களை உளவாளிகளாக அனுப்பியிருந்தார்களோ அந்த கண்ணியத்திற்குரிய ஸஹாபிகள் அவர்களைப் பிடித்து விட்டனர். அவர்கள் அந்த நபர்களின் ஒட்டகங்களின் கயிற்றைப் பிடித்து விட்டனர். நீங்கள் யார்? என்று அபூ ஸுஃப்யான் போன்றோர் கேட்டனர். அதற்கு, இவர்கள் இறைத் தூதர் (ஸல்) மற்றும் அன்னாரின் ஸஹாபிகள் என்று அவர்கள் கூறினர். அபூ ஸுஃப்யான் கூறினார்: இதற்கு முன்னர் இவ்வளவு பெரிய படை ஒரு சமுதாயத்திற்கு முன்னர் வந்து இறங்கி அதனை அவர்கள் அறியாதவர்களாக இருந்துள்ளனரா? அப்படி ஏதாவது ஒரு சம்பவம் நிகழ்ந்துள்ளதா? எவ்வித தகவலும் இன்றி இவ்வளவு பெரிய படை எப்படி வந்துவிட்டது?

மற்றோர் அறிவிப்பில் இவ்வாறு உள்ளது: இறைத் தூதர் (ஸல்) அவர்கள் மர்ருஸ்ஸஹ்ரான் சென்றடைந்தபோது, ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்களின் உள்ளம் மக்காவாசிகளுக்காக மென்மையாகிவிட்டது. எனவே அவர்கள் இறைத் தூதர் (ஸல்) அவர்களின் ஷஃபாஃ என்ற பெயர் கொண்ட வெள்ளை நிற கோவேறி கழுதையின் மீது சவாரி செய்து அராக் வரை வந்தார்கள். மேலும், மக்காவாசிகளுக்கு இறைத் தூதர் (ஸல்) அவர்களின் வருகை குறித்து தகவல் கொடுக்கக் கூடிய எவராவது கிடைத்துவிடுவார் ; மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வலிமையுடன் மக்காவில் நுழைவதற்கு முன்னதாக, நீங்கள் வந்து இறைத் தூதர் (ஸல்) அவர்களிடம் அடைக்கலம் வேண்டி விண்ணப்பம் செய்யுங்கள் என்று மக்கத்தினருக்கு அவரிடம் கூறி அனுப்பலாம் என்று அன்னார் உள்ளத்தில் எண்ணினார்கள். அப்போது அன்னார் (ரலி) அப்படி சிந்தித்து கொண்டுதான் இருந்தார்கள்; அந்நிலையில் அன்னார் (ரலி), அபூ ஸுஃப்யான், ஹக்கீம் பின் வர்காஃ மற்றும் புதைல் பின் வர்காஃ ஆகியோரின்




Manufacturer and Retailer of Leather Fashion and Bags.
Specialized in the Desing and Production of Quality & Sale Online Platform
Like Flipkart, Amazon, Meesho. & Product Key Word is "Grizzly Wallet"
6294738647 mygrizzlyindia@gmail.com, www.mygrizzlyindia.com
my grizzly india
my grizzly india
my grizzly india

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2023-2025 Vol.10. Thursday 07 AUGUST 2025 Issue No.32

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

குரலை செவிமடுத்தார்கள். நான் இன்று வரை ஒருபோதும் இப்படிப்பட்ட நெருப்பையும் கண்டதில்லை ; படையையும் கண்டதில்லை ; என்று அபூ ஸுஃப்யான் கூறினார்; அல்லாஹ்வின் மீது ஆணையாக,! இது குஸாஆ கோத்திரத்தாரின் நெருப்பு ஆகும் ; போரின் ஆசையானது அவர்களின் உணர்ச்சிகளை தூண்டி விட்டுள்ளது என்று புதைல் கூறினார். அபூ ஸுஃப்யான் கூறினார்: அல்லாஹ்வின் மீது ஆணையாக! குஸாஆ கோத்திரத்தார் பலவீனமானவர்களும், எண்ணிக்கையில் குறைவானவர்களாகவும் இருக்கின்றனர். இது அவர்களுடைய நெருப்பாகவும், படையாகவும் இருக்க முடியாது. ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் அவர்களுடைய சப்தத்தைக் கேட்டுவிட்டார்கள். மேலும் அவர்களை அடையாளம் கண்டு கொண்டு விட்டார்கள். மேலும், அபூ ஸுஃப்யானும் அவர்களை அடையாளம் கண்டு கொண்டுவிட்டார். ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அபூ ஸுஃப்யானை இறைத் தூதர் (ஸல்) அவர்களிடம் அழைத்துச் சென்றார். மேலும், அவருடைய இரண்டு தோழர்களும் திரும்பிச் சென்று விட்டனர். அபூ ஸுஃப்யானை தனியாக அழைத்துச் சென்று விட்டார்கள். மற்ற தோழர்களை விட்டு விட்டார்கள். மேலும், ஓர் அறிவிப்பில் உள்ளது: ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் அவர்களை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் அழைத்துச் சென்றார்கள் என்று வருகின்றது. இரண்டு வகையான அறிவிப்புகள் இருக்கின்றன.

(ஸுபுலுல் ஹுதா, தொகுதி 5, பக்கம் 214- 216, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத்)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இதனைப் பற்றிய குறிப்பை இவ்வாறு எடுத்துரைக்கின்றார்கள்:

இங்கோ முஸ்லிம்களின் இந்தப் படை அணி வகுத்து மக்காவின் பக்கம் சென்று கொண்டிருந்தது. மேலும் அங்கு மக்காவாசிகள் விண்ணில் பரவியிருந்த அமைதியின் காரணமாக அதிக அதிகமாக அச்சமடைந்து கொண்டு சென்று கொண்டிருந்தனர். இறுதியில், அவர்கள் ஆலோசனை செய்து அபூ ஸுஃப்யானை மீண்டும் இந்த விஷயத்திற்கு உடன்பட செய்தார்கள். அதாவது அவர் மக்காவிலிருந்து வெளியில் சென்று முஸ்லிம்கள் என்ன செய்ய விரும்புகின்றார்கள்? என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.மக்காவிலிருந்து சிறிது தொலைவில் வெளியில் சென்ற உடனேயே அபூ ஸுஃப்யான் இரவு நேரத்தில் காடு நெருப்பால் ஒளிர்ந்து கொண்டிருப்பதைக் கண்டார். இறைத் தூதர் (ஸல்)அவர்கள் இவ்வாறு கட்டளை வழங்கியிருந்தார்கள்; அதாவது, அனைத்து கூடாரங்களுக்கு முன்பும் நெருப்பு மூட்ட வேண்டும் என்று கட்டளையிட்டிருந்தார்கள். காட்டில் பத்தாயிரம் நபர்களுக்காக கூடாரங்களுக்கு முன்னால் மூட்டப்பட்டிருந்த நெருப்பு ஒரு பயங்கரமான காட்சியை வெளிப்படுத்திக் கொண்டிருந்தது. அபூ ஸுஃப்யான் இது என்ன? விண்ணிலிருந்து ஏதாவது படை இறங்கியுள்ளதா என்ன? ஏனெனில், அரேபியாவில் இவ்வளவு பெரிய படை எந்த சமுதாயத்திற்கும் இல்லை என்று தமது கூட்டாளிகளிடம் கூறினார்.அவரது கூட்டாளிகள் பல்வேறு கோத்திரங்களின் பெயர்களை குறிப்பிட்டார்கள். ஆனால், இல்லை ; இல்லை என்று அவர் கூறினார். அரேபிய கோத்திரங்களில் எந்த சமுதாயத்தின் படையும் இவ்வளவு பெரிய படையாக எப்படி இருக்க முடியும்? அவர்கள் இவ்வாறு பேசிக் கொண்டிருந்தனர். அப்போது அபூ ஹன்தலாஃவே! (இது அபூ ஸுஃப்யானின் சுட்டுப் பெயராக இருந்தது) என்று இருளில் இருந்து சப்தம் வந்தது. அப்பாஸே! நீர் இங்கு எப்படி? என்று அபூ ஸுஃப்யான் கேட்டார். அதற்கு, முஹம்மது (ஸல்) அவர்களின் படை முன்னால் இருக்கின்றது என்று அன்னார் பதில் அளித்தார்கள். நீங்கள் விரைவாக ஏதாவது திட்டத்தை மேற்கொள்ளவில்லை என்றால் பின்னர் தோல்வியும், இழிவும் உங்களுக்கு முற்றிலும் தயாராக உள்ளது. (தீப்பாச்சா தஃப்ஸீருல் குர்ஆன், அன்வாருல் உலூம், தொகுதி 20, பக்கம் 337 -338)

அதாவது, தற்போது சமாதானத்தின் பக்கம் வாருங்கள்! என்ற விஷயமே உள்ளது.

எவ்வாறிருப்பினும், இதன் பிறகு விளக்கத்தில் இன்னும் கூடுதல் விஷயங்கள் இருக்கின்றன. அதன் விபரங்கள் மிகவும் நீண்டதாக இருக்கின்றன. இன்ஷா அல்லாஹ்! எதிர் வரும் காலத்தில் எடுத்துரைப்பேன். நான் எப்போதும் கூறுவது போன்று துஆக்களின் பக்கம் கவனம் செலுத்திக் கொண்டிருங்கள். அல்லாஹ் உலகை குழப்பத்திலிருந்து பாதுகாப்பானாக! மேலேயும், கீழேயும் என்ன நிலைமைகள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றனவோ அதனை மேன்மையின் பக்கம் சென்று விடும் வகையில் அல்லாஹ் சிறந்ததாக ஆக்குவானாக! இன்னும் அழிவின் பக்கம் சென்று விடாது இருக்கட்டுமாக! (அல் ஃபஸ்ல் இன்டர் நேஷனல், ஜூலை 11, பக்கம் 2 -6)

தமிழாக்கம்
மவ்லவி அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * * *

1- ம் பக்கத் தொடர்ச்சி (நூஹ் நபியின் கப்பல் என்ற நூலிலிருந்து) ........ ....

மௌலவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவி தலைமை புரோகிதனைப் போன்ற எனக்கு விரோதமாகச் சாட்சியம் அளிக்க வந்தபோது நான் இருக்கையில் அமர்ந்திருப்பதைக் கண்டார். எனது எந்த இழிவைக் காண்பதற்கு அவரது கண்கள் ஆசை கொண்டவையாக இருந்தனவோ அந்த இழிவை அவரால் காணமுடியவில்லை. அப்போது சமஅந்தஸ்தாவது தனக்குக் கிடைத்தால் அதுவே போதுமானது என நினைத்து அவரும் அந்த பிலாத்துவிடம் அமர்வதற்கு இருக்கை ஒன்றை விரும்பிக் கேட்டார். ஆனால், அந்த பிலாத்து அவரைக் கண்டித்தது மட்டுமல்லாமல் உமக்கும், உமது தந்தைக்கும் ஒருபோதும் இருக்கை கிடைத்ததில்லை. மேலும் எங்களது அலுவலகத்தில் உமக்கு இருக்கைக்காக எவ்வித கட்டளையும் இல்லை என உரத்த குரலில் கூறினார்.

இப்போது இந்த வேறுபாடும் கவனத்திற்குரியதாயிருக்கிறது. அதாவது முதலாவது பிலாத்து யூதர்களுக்கு அஞ்சி அவர்களது கண்ணிய மிக்க சில சாட்சிகளுக்கு அமர்வதற்கான இருக்கை அளித்தார். ஆனால், குற்றவாளிகளைப் போன்று கொண்டு வரப்பட்ட ஹஸ்ரத் ஈஸா மஸீஹை நிற்க வைத்தார். இருந்தபோதிலும் அவர் இதயப்பூர்வமாக அவரது நன்மையை விரும்பக் கூடியவராக இருந்தார். அவரது மனைவியாரும், மஸீஹின் சிறப்பு மிக்க சீடாரகவும் இருந்தார். மேலும், அவர் இறைநேசர் என்று அழைக்கப்பட்டு வந்தார். ஆயினும்,அவரது பீதியானது அநீதியாக நிரபராதியான மஸீஹை யூதர்களிடம் ஒப்படைக்கும்படியான தவறான கட்டளையை பிறப்பிக்கச் செய்தது. என்னைப் போன்று அவர் மீது கொலைக் குற்றம் சுமத்தப்படவில்லை. மாறாக சிறிய நிலையில் மார்க்க வேறுபாட்டின் காரணமாக மட்டுமே இருந்தது. ஆயினும் அந்த ரோமரான பிலாத்து உறுதியான மனம் படைத்தவராக இருக்கவில்லை. அரசரிடம் தன்னைப் பற்றி முறையீடு செய்யப்படும் என்பதைக் கேள்வியுற்றதுமே அவர் பீதி அடைந்து விட்டார்.

(கிஷ்தீ நூஹ், ரூஹானீ கஸாயீன், தொகுதி 19, பக்கம் 55-57)

* * * * * *

**National Watch Company**



B. Mohamed Adil
93632 06679
99433 38000

**Sales & Service**

196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM
99947 57172

**O.A.N. Doors & Steels**

V.A. SAIT
99430 30230



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad